# தமிழ் வளர்த்த முஸ்லிம் புலவர்கள் (2)

## யாழ்நகர் தந்த அசனார் லெவ்வைப் புலவர்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி இலங்கை முஸ்லிம்கள் கல்வியில் மிகவும் பிற்போக்கடைந்திருந்த காலம். ஆங்கிலம் படித்து அரசாங்க உத்தியோகம் பார்த்தோர் மிகக் குறைவு. அத்தகைய காலத்தில் ஆங்கிலத்தில் போதிய தேர்ச்சியடைந்து யாழ்ப்பாணம் எத்திராயியல் ஆலுவலகத்தில் உத்தியோகத்தராகக் கடமை செய்தவர் அசனார் லெவ்வைப் புலவர். யாழ்ப்பாணப் பகுதியிலேயே முதன் முதலாக அரசாங்க ஊழியராகப் பணி புரிந்த முஸ்லிம் இவர்தான்.

ஈழத்து முஸ்லிம் புலவர் அணியில் முதலிடம் பெறுபவர் யாழ் நகர் தந்த அசனார் லெவ்வைப் புலவர்தான். இவரது தந்தை சுல்தான் முகைதீன் என்பவராகும். இவர் இளமையிலேயே இஸ்லாமிய மார்க்கக் கலையைக் கற்பதில் ஆர்வஞ் செலுத்தியதோடு தமிழறிவிலும் முன்னேற்றம் அடைந்துவந்தார். தமிழ் இலக்கணத்தைத் தெளிவுறப் படித்து, நன்னூல், தொல்காப்பியம், தண்டியலங்காரம் முதலிய இலக்கண நூல்களைக் கற்றுத் தேர்ச்சி பெற்ருர். மெல்ல மெல்லத் தமிழ்த் தேன் இவரின் நாவிலே பிலிற்றுவிட்டதால் இளமையிலேயே கவிதை பாடும் ஆற்றலைப் பெற்ருர்.

இவ்வாறு தமிழ்ப் புலமையிலும், தெளிந்த ஆத்மீகத்திலும் தேர்வு பெற்றவராய் விளங்கிய இப்புலவரின் இளமையுள்ளம் தமிழ்க் கடலில் மூழ்கி நல்முத்துக் கண்டெடுக்க வேண்டுமெனப் பிடர் பிடித்துந்தியது. அதன் பயனாக "திருப்புகழ் பாவணி" என்றதொரு செந்தமிழ்த் தேன் சொட்டும் இலக்கியப் படைப்பை ஆக்கினுர். அழகு தமிழில் ஆத்மீக விருந்தளிக்கும் இந்நூல் சொல்லழகும், கருத்தாழமும் மிக்கதாக விளங்குகிறது. இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் தமிழ் மணம் கமழ்கிறது; ஆழ்ந்த கருத்தும் உயிரோட்டமும் மிளிர்கின்றன.

### சுவைமிக்க பாடல்கள்

"திருப்புகழ் பாவணி" என்ற இந்நூலில் இஸ்லாமிய மதப் பெரியார்களான முகைதீன் அப்துல் காதிர் அவர்கள் பேரில் ஆசிரிய விருத்தமும், அஹ்மது கபீறுர் றிபாயி ஆண்டகை பேரில் பதாயிகுப் பதிற்றுத் திருத்தந்தாதியும், சாகுல் ஹமீது ஆண்டகை பேரில் முனாஜாத்தும் இடம் பெற்றுள்ளன. இந்நூலிலுள்ள தமிழ் மணம் கமழும் சுவைமிக்க சில பாடல்களைக் கீழே தருகிறேன். இப்பாடலில் முகைதீன் அப்துல் காதிரின் குடும்ப வரலாற்றைக் கூறி, அவரின் புகழ் பாடி, தன்னைப் புவி மாயையிலிருந்து காப்பாற்றுமாறு புலவர் இறைஞ்சும் இப்பாடல் நம் முள்ளத்திற்கு உயர்வு மிக்க உவகை விருந்தளிக்கிறது. இதோ அப்பாடல்;

"பூமேவு குபிறெனு மிருட்
படலமற—விறை
பொலிந்திட விடுக்க வந்த
புகழ்பரவு நபிமார்தம்
மரசாகி—மக்கமாம்
பொன்னகருதித்த
குருசில

மாமேவு மகுமூது நபிபுதல்வி—
யுலகத்து
மங்கைய ரியார்க்கு மரசி
மதிவதன பாத்திமாவெனு
நங்கை—புதல்வருள்
மற்று முஸைய ராகி

தாமேவு மேந்தலான் மரபில்
வருமரிய—அபு
சாலிகி னருட் டனயராய்த
நாவுதப பாதநிமா
வயிறுறைந்து—
உலகெலாம்
தனைமை யொரு
வாழ்த்தெடுப்ப

பூமேவு தண்டலைகொள்
ஜெய்லானி—வந்தவ
புரந்தருள் வேழு
மென்னையே
புவிமாயை மருவாது
தவமீறு வினையாடு
போதரா முறையப்
பித்திளே"

அடுத்து அஹ்மது கபீறுர் றிபாயி ஆண்டகை பேரில் பாடப் பெற்றுள்ள பாடல்களிலொன்றை நோக்குவோம்:

"இன்றேன் றுளிக்குமலர்
தொன்றுந் தாவியை
களிப்பின்
மன்றேன் றுளிக்குடைந்
துண்டிசையாப்ப
செய்வாளை வோரிச்
கொன்றேறுன்
றுளிக்குலம்பாய் பதாயிக
சேவடி மேய்
நின்றேன் றுளிக்குயிர்
கன்றுற்கணித்தி
நின்கனஞ் சுவந்தே"

இப்பாடலில் பதாயி நகரின் சிறப்பை விளக்கி, அந்நகரிலுதித்த கபீறுர் றிபாயி ஆண்டகையின் மேன்மையை விளக்குகிறார்.

சாகுல் ஹமீது ஆண்டகையிடம் பாதுகாவல் தேடி இறைஞ்சும் பாக்களும் நம் உள்ளத்தை நெகிழச் செய்கிறது. அத்தகைய ஒரு பாடல் வருமாறு:

*யூ. எல். தாவூத்*

"மெய்யம் புவனமிசை
யுழவாதனி வெங்கொடிய
வெய்யம் புவனமிசை
யாழின்தேட்டத்தை
யான்றெளிய
மய்யம் புவனமிசை
கனியாபக்குலதாயி குற்றிவ்
வய்யம் புவனமிசை
தண்ணளியிறை
ஆண்டகையே"

இந்நூலில் மக்கா, மதீனு ஆகிய இரு நகரங்களும் திருத்தலங்களாக இடம் பெற்றுள்ளன. திருநபி அவர்கள் மக்காவில் பிறந்து, மதீனுவுக்குச் சென்று உலகெலாம் இஸ்லாத்தைப் பரப்பி, பல்வேறு பகுதிகளின் அரசராக வீற்றிருந்தார்களென்பதைப் புலவர் மேல் வரும் பாடலில் படம் பிடித்துக் காட்டுகிறார்.

"மதிகள் பலவுரு முயர்வுறு
நின்ற மக்கநக
ரிலிலன முதிமெறினு
வந்து புக்குலகு
பலதிசையு மொரு
குடையினுளும் புரக்குமா—
கிறகுலே"

### சன்மார்க்கம் சாற்றும் சந்ததப்பா

இந்நூலிலுள்ள பாடல்களனைத்தும் சொல்லழகு, பொருள் பெருக்கம், ஓசைப் பண்பு, இலக்கண அமைதி இவைகளில் தனி சிறந்து விளங்குவதோடு நல்ல உயிர்த் துடிப்பும் ஓடிக் கொண்டிருப்பதால் படிப்போர் மனத்தை இழுத்துப் பிடிப்பனவாய் அமைந்து; சன்மார்க்க நெறியை அள்ளி இறைக்கின்றது. இத்தகைய இனிய செந்தமிழ் நடையிலமைந்த உயிர்க் காவியமான இந்நூலின் சிறப்புக்குப் பின்வரும் பாடலே சான்று பகரும். இஸ்லாத்தின் திருநபி அவர்களது பண்புகளை விளக்கும் ஓசைநயம் பொருந்திய சந்ததப்பாவைப் படித்துக் களிப்புள்ளம் கொள்வோமாக:

"அடரு மண லியறிரியி
ஞமிரி யினு
முதகவியல் பது சறுகினு
மறுகினு
மனலினுறு குணமிகலி
னுமகலினு விசைமேவு

மரியலனி முனைய வழுவி
னுநழுவினும்
திளருமலி நிலைபதறி
னுமுதறினு
மலிமிசை நெடாருலேய
மினுமலியினு மலைமாறி

மிடைகொளெழு கடல்
புரளினு மவரளினு
மொலிரு முகிலின முதிரி
னுமதிரினு
மினிய செழுமதி தளரினு
முளரினு மகனமேல்பா

விரவி புதய மதியலினு
முயலினு
மனது குணதிசை படியினு
மடியினு
மீனையில் கதிர்முனே
குலியினு மலியினு
விரிநீர்மை

யுடைய ககன் முகடிடியினு
மொடியினு
மவனியொடு ககன்
விரவினு நிரவினு
முயிர்கண்
முழுமையுமழியினு
மொழியினு மொருபோது

முலக முழுவது மறிதக
வெறிதக
நெகிழ நபியென
விறைதரு மறைதரு
முவகை தவிர்பெயர்
மறைதலில் குறைதலில்
மருமூதே

மடமை குடிகொரு மிடிமைமழு
வடிமையன்
மனதிலி துன்மிசை
திணமது குணமது
வளரவிரு விழி
பொழிதரும் வழிதரும்
மனிநாலீர்

மதுவினதியுட னொருமை கொள
பெருமை கொள
முல்கொள் பயநதி
விசைகொளு மிசைகொளு
மதின நகர் வயின
வதிதரு மிறைகுலே"

### செய்யுட் தொகுப்பு

அசனார் லெவ்வைப் புலவர் இயற்றிய இன்னுமொரு நூல் "குலப்பு நாயக அனுசாசனம்" என்பது. இது இருநூற்றி நாற்பத்தி நான்கு பாடல்களைக் கொண்ட ஒரு செய்யுட் தொகுப்பு. இந்நூலில் பகுதாத நகரில் வாழும் மக்களின் கல்விச் சிறப்பைப் புலவர் பண்ணிசைத்துப் பாடும் பாடலொன்றைக் கீழே குறிப்பிடுகிறேன்:

"ஆலேயார்பினை படக்கு
மாவனவழங்க
லன்ன தைபட்டரி முன்"
சோலேயாவிசை படக்கு
மன்னதை மணத்தின்
றேகையர் கணக் கொடு
சாலே தோறிறு மரற்றுங்
குரவை

(15-ம் பக்கம் பார்க்க)

# புற்று நோய் தீர்க்கும் இமயமலைச் செடி

இமயமலையில் சுமார் 7000 முதல் 11000 அடி உயரத்தில் விளையக்கூடிய 'கலாபின்' அல்லது 'குமா' என்ற அதிசய மூலிகை இலைவகை புற்று நோய்களைக் குணப்படுத்துவதில் மிகவும் நம்பிக்கை யூட்டும் பலனளித்திருக்கிறது.

இந்த பச்சிலை மூலிகையை இந்திய புற்று நோய் ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதனைச்சாலையில் சோதித்து ஆராய்ச்சி செய்யப்பட்டதில் மேற்கண்டவாறு நம்பிக்கையளிப்பதாகத் தெரிய வருகிறது.

கறுஞ் சாம்பல், கறுஞ் சிவப்பு நிறமும் கொண்ட இச்செடியின் பட்டை புற்று நோய்க்கு நல்ல மருந்தாகப் பயன்படும் என்று தெரிகிறது.

இதைப் பற்றி புராதன ஆயுர்வேத சாஸ்திரங்களில், சில சுவாசகோச நோய்களுக்கான மூலிகை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த மூலிகைச் செடியின் பட்டையை எடுத்து ஒரு ஆண்டு காலமாக ஆராய்ச்சிகள் நடத்திவரும் புற்று நோய் ஆராய்ச்சி நிலையம் பம்பாய் கெமிஸ்டிரி இலாகாவைச் சேர்ந்த டாக்டர் டி. பி. பாண்டே இந்த மூலிகை மிகவும் நம்பிக்கையூட்டும் பலனளித்திருப்பதாகக் கூறினார்.

பட்டைகளிலிருந்து எடுக்கப்பட்ட சாறு, சுண்டெலி, எலிகள் ஆகியவைகளுக்குக் கொடுக்கப்பட்டு ஆராய்ச்சி நடத்தப்பட்டதில் நம்பிக்கையூட்டும் முடிவுகள் கிடைத்துள்ளன.

பிராணிகளின், கட்டிகளில் செலுத்தப்பட்டதில், மிகவும் குறிப்பிடத்தக்க,தடுப்பு உணர்ச்சி சக்தியை அது ஏற்படுத்தியிருப்பது காணப்பட்டது.

மூலிகையின் விஷச் சத்துப் பற்றிய முதல் நிலை ஆராய்ச்சிக்குப் பிறகு புற்று நோயுள்ள பரிசோதனைச் சாலை பிராணிகளுக்கு அவை தாங்கக்கூடிய அளவுக்கு மருந்து கொடுக்கப்பட்டது. இரண்டு வகைக் கட்டிகளுக்கு இம் மருந்து ஏற்பட்டது. முதல் வகையில் 60 முதல் 70 சதவிகிதம் கட்டி கரைந்து விட்டது. இரண்டாவது கட்டியில் பிராணி உயிர்த்திருக்கும் காலம் இரண்டு மடங்காயிற்று.

# மட்டக்களப்பு கடற்கரைப் பிரதேசத்தில் முந்திரிகைச் சாகுபடி

## காணி வழங்க வேண்டுமென திரு. இராசமாணிக்கம் வற்புறுத்தல்

மட்டக்களப்பின் தென் பகுதியில் உள்ள கடற்கரையோரமாகப் பரந்துகிடக்கும் நிலப் பரப்பில் முந்திரிகைச் சாகுபடியை அபிவிருத்தி செய்யும் முகமாக, இப்பகுதி விவசாயிகளுக்கும் நடுத்தர வகுப்பினருக்கும் காணி வழங்கப்படவேண்டுமென, தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம், அரசாங்க அதிபரை வற்புறுத்தியுள்ளார்.

இப்பகுதியில் கடற்கரையோரமாக உள்ள முடிக்குரிய காணிகள் பயனற்றுக் கிடப்பதாகவும், இந்த நிலம் முந்திரிகைச் சாகுபடிக்கு மிகவும் சிறந்ததென்றும், திரு. இராசமாணிக்கம் சுட்டிக் காட்டியுள்ளார். இப்பகுதியில் முந்திரிகைச் சாகுபடியை அபிவிருத்தி செய்வதால், ஏழை விவசாயிகளினதும், நடுத்தர வகுப்பினரதும் பொருளாதார நிலையைஓரளவுக்கு உயர்த்த முடியும். ஆகையால் வீணே பயனற்றுக் கிடக்கும் முடிக்குரிய காணியை, ஒவ்வொரு காரியாதிகாரித் தொகுதிக்கும், பிரித்துக் கொடுத்து, அவற்றை, பொது மக்களுக்கு வழங்கவேண்டும் என்பது திரு. இராசமாணிக்கத்தின் வேண்டுகோள்.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

ANANDA MEDICAL HALL · TRADE MARK · ஆனந்தா · 174, SEA STREET, COLOMBO

நெ. 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அனேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நெ. 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம். பி. தாஹூது, இரத்தினபுரி.

கே: மூதூர் உப தேர்தலில் போட்டியிட்டு கட்டுப்பணத்தை இழந்த சுந்தரர் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

ப: 429 வாக்குகளுக்கு ரூ. 1000 (கட்டுப்பணம்) இழக்க வேண்டுமானால் 14216 வாக்குகளைப் பெற (ஜனாப் முகமதலி பெற்ற வாக்குகள் 14215) எத்தனை ஆயிரம் ரூபாய்களை இழக்க வேண்டுமென்று கணக்குப் போட்டுப் பார்க்கிறாராம். கணக்கில் புலியல்லவா அவர்?

ஃ

எம். எஸ். ஆர். கல்வியங்காடு.

கே: என்னுடைய மனைவி, என் நண்பன் எனது வீட்டுக்கு வந்துவிட்டால், என்னுடன் கோபமாக நடக்க ஆரம்பித்து விடுகிறாள். அதன் மர்மம் என்ன?

ப: கணவனுடன் மனத்தாங்கல் கொண்டிருப்பதாகவும், அவனைத்தான் விரும்பவில்லை யென்றும் நேரடியாகக் கோபப்படுவதின் மூலம் நிரூபித்துக்காட்டுவது நண்பனைத் தனது வலையில் சிக்கவைக்கும் ஓர் உபாயமாகும்.

ஃ

ஜே. பி. புரட்சிதாசன், எட்டியாந்தோட்டை.

கே: இன்றைய மாணவர்கள் கல்வியில் பின்நோக்கிப் போவதின் காரணம் என்ன?

ப: வாடை பிடிக்கும் முயற்சியில் முன்னேறுவதால்...

ஃ

ரு. சிவஞான சண்முகம், துணுக்காய்.

கே: விவாகத்திற்கு முன்பு சில இலட்சியங்களைக் கொண்ட பெண்கள் விவாகமானதும் அந்த இலட்சியங்களை மறந்துவிடுவதேன்?

ப: அந்த இலட்சியங்கள் நிறைவேறிவிடுவதால்.

ஃ

ஆ. கங்காதரன், இறக்காமம்.

கே: அறிக்கை பல அள்ளி வீசிய கொழும்புக் கிளை காங்கிரஸ் மூதூர் தேர்தல் முடிவைப் பற்றி ஏன் அறிக்கை விடவில்லை?

ப: "சந்திக்கு வந்தவை" யில் தங்களின் குட்டு வெளிப்பட்டுவிட்டதால், முக்குடைபட்டு முக்காடிட்டு மூலையில் பதுங்கி, மூதூர் முடிவு பற்றிக் கயிறு திரிக்க முடியவில்லையே என்று ஏங்கித் தவிக்கிறார்களாம்.

ஃ

இ. இராசகுலேந்திரன், கோப்பாய் வடக்கு.

கே: இக் காலத்துப் பெண்கள் கண்ணாடி போன்ற சேலை அணிவதின் நோக்கமென்ன?

ப: ஆண்களின் கண்களில் அங்கங்களை ஊடுருவும் சக்தியை, அதிகரிக்கச் செய்வதற்காக......

ஃ

மு. சுப்பிரமணியம், மாவிட்டபுரம்.

கே: திரு. சுந்தரலிங்கம் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

ப: எம். பி. தாஹூதும் இதே கேள்வியைத்தான் கேட்டிருக்கிறார்.

தமிழ் மக்கள் முஸ்லிம் அபேட்சகருக்கு வாக்களித்த இரகசியத்தைக் கண்டு பிடிப்பதற்காக பூதக் கண்ணாடியைக் கொண்டு ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருக்கிறாரென கடைசியாக வந்த ஒரு செய்தி கூறுகிறது.

ஃ

சின்னத்தம்பி கோமளம், கிளிநொச்சி.

கே: நான் ஆடம்பர வாழ்க்கை வாழ வேண்டுமென்று விருப்பம் கொண்டவள். என்னைப் போல ஆடம்பர வாழ்க்கையை விரும்பும் பெண் ஒருத்தியைக் கல்மடுவிலிருந்து கிளிநொச்சி வரை தேடினேன். கிடைக்கவில்லை, அதற்கு என்ன செய்யலாம்?




ப: வெளி வேடத்தில் நாட்டம் கொண்ட அம்மணியே, இல்லாத இடத்திலல்லவா போய்த் தேடினீர்கள். கொழும்புப் பக்கம் வந்து கொஞ்சம் கண் திறந்து பாருங்கள்! வகைக்கு ஒன்று கிடைக்கும்.

ஃ

ஜெயரத்தினம், உடுத்தலிவின்னை.

கே: "சுதந்திரன்" ஆரம்பித்து எத்தனை ஆண்டுகள்?

ப: 16 ஆண்டுகள்.

ஃ

வி. மூர்த்தி, காரைதீவு.

கே: நான் ஓர் அனாதை. உங்களிடம் வந்தால் என்னைக் கவனிப்பீர்களா?

ப: அரசியல் அனாதைகளைக் கவனிக்கவே எனக்கு நேரம் போதவில்லையே!

ஃ

கே. வைரமுத்து, சென்றல் கேம்ப்.

கே: வைத்தியத் தொழில் புரியும் டாக்டர்களும் கூட ஏன் "மெடிக்கல் லீவு" போடுகிறார்கள்?

ப: "மெடிக்கல் லீவு" என்பது வேலைக்கு 'டிமிக்கி' கொடுப்பதற்காகக் கையாளப்படும் ஒரு நொண்டிச் சாக்கு. அதற்கும் வைத்தியத்துக்கும் சம்பந்தமேயில்லை.

ஃ

எம். ஹனிபா, இறக்குவானை.

கே: நான் ஒரு கன்னியைக் காதலித்தேன். ஆனால் என் இதயராணி மற்றொருவரிடம் மனதைப் பறிகொடுத்ததைக் கண்ணால் கண்டேன். அதனால் நான் என் காதலுக்கு அணைகட்டினேன். இப்போது அவளே என்னோடு பேசுவதற்குப் பெரு முயற்சி செய்கிறாள். நான் அவளை மறுக்கவா? அல்லது மன்னிக்கவா?

ப: உங்களைப் போன்ற சந்தேகப் பிராணிகளுக்குக் காதல் சரிப்பட்டு வராது. ஆயினும் அவளுக்கு மற்றொரு "சான்ஸ்" கொடுத்துப் பாருங்கள்.

ஃ

வ. சி. பரமலிங்கம், வட்டுக்கோட்டை.

கே: இதுவரை அரசியலாளருக்கு விளங்காதிருந்த நம் மூதூர் தேர்தலின் பின் விளங்கியதும் எது?

ப: சிங்களவர்களே அவர்கள் காலை வாரி விடுவார்களென்பது.

ஃ

குணநாயகம், கருவாஞ்சிக்குடி.

கே: மட்டக்களப்பு தமிழ் பேசும் ஐக்கிய முன்னணி இப்போது எங்கே?

ப: அநாமதேயப் பேர்வழிகள் சிலரால் உருவாக்கிய இந்தக் குறைமாதக் குழந்தை பிறக்க முன்பே இறந்துவிட்டதே!

ஃ

இரா. விசாகரெத்தினம், திருகோணமலை.

கே: அடுத்து வரும் தேர்தலில் சிறிமாவோ அம்மையாருடன் நான் போட்டி போடப் போகிறேன். நீங்கள் "ஹெல்ப்" பண்ணுவீர்களா?

ப: என்ன ஐயா, கனவு காண்கிறீரா? தேர்தலில் போட்டியிடும் "கெட்ட" பழக்கந்தான் அந்த அம்மையாரிடம் கிடையாதே!

ஃ

என். கிருஷ்ணன், வவுனிக்குளம்.

கே: நான் ஒரு தாழ்ந்த சாதிப் பெண்ணைக் காதலிக்கிறேன். அதை எனது நண்பன் வெறுக்கிறான், என்ன செய்யலாம்?

ப: காதலுக்கு கண்ணே இல்லாத போது சாதி ஏது ஐயா? நீர் எந்தச் சாதிப் பெண்ணை வேண்டுமானாலும் காதலிக்கலாம். சட்டப்படி அதற்கு உமக்குப் பரிபூரண சுதந்திரமுண்டு. அதனை வெறுப்பதற்கும் நண்பனுக்குச் சுதந்திரமுண்டு.

ஃ

கு. பொன்னுத்துரை, சுழிபுரம்.

கே: ஜூன் 28-ந் திகதி தமிழரசுக் கட்சி இந்நாட்டிலிருந்து ஒழிக்கப்படும் நாள் என்று கொக்கரித்த நிதி மந்திரியை இப்போது கேட்டால் என்ன கூறுவார்?

ப: வாக்காளர்கள் "சோஷலிஸம்" தெரியாத பிற்போக்கு வாதிகள் என்று கூசாமல் கூறுவார்.

ஃ

திருமதி. அருச்சுன, புலோலி மேற்கு.

கே: ஈழத்தமிழருக்கு ஒரு காந்தி மட்டுமல்ல, நேத்தாஜியும் தேவை. உங்கள் கருத்தென்ன?

ப: சந்தர்ப்பம் வரும்போது நேத்தாஜி ஒருவர் நம் மத்தியிலிருந்தே தோன்றக் கூடும்.

ஃ

என். எம். வேலுப்பிள்ளை, சாவகச்சேரி.

திரு. சுந்தரலிங்கம் இனிமேல் அரசியல் துறவு பூணுவாரா? அல்லது தமிழரசுக் கட்சியுடன் எதிர்காலத்திலும் போட்டியிடுவாரா?

ப: அவர் அவ்விரண்டையும் ஏற்கனவே செய்து பார்த்துவிட்டார். நியமன எம். பியாகச் சட்ட சபைக்குள் நுழைந்து, மந்திரி சபையில் இடம் பிடிப்பதற்காக காக்காய் பிடிப்பதுதான் அவருக்கு எஞ்சியுள்ள ஒரே வழி.

ஃ

பி. செல்வராசன், அநுராதபுரம்.

கே: கடந்த பல வருடங்களாக நிறுத்தி வைக்கப்பட்ட நிதி உதவிகள் யாவும் மகாவிலாச்சி குடியேற்றத் திட்டத்திலுள்ள குடியேற்ற வாசிகளுக்கு சென்ற ஆனி மாதம் ஆளும் கட்சியால் திடீரென வழங்கப்பட்டது. இதன் மர்மமென்ன?

ப: அநுராதபுரம் உப தேர்தலில் வோட்டு வேட்டையாட கையாண்ட உபாயங்களில் இதுவும் ஒன்று.

ஃ

வி. எஸ். வேலு, வடுகல்.

கே: மலை நாட்டுத் தமிழரின் வவுனியாக் குடியேற்றம் பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: இது ஒரு தந்திரோபாயம். விரல்விட்டு எண்ணக் கூடிய ஒருசிலரைக் கொண்டு போய் குடியேற்றி விட்டு, மலை நாட்டுத் தமிழர்களை வவுனியாவில் குடியேற்றுவதாகப் பறை சாற்றப்படுகிறது. 8-7-62-ந் திகதி சுதந்திரனில் "வன்னிநாடும் புதிய ...... றிந்து" என்ற செய்தியை வாசித்துப் பாருங்கள். வவுனியாக் குடியேற்றத்தின் இரகசியம் தெரியும்.

ஃ

தமிழ்ச் செல்வன், ஹேப்டன்.

கே: மூதூர் இடைத் தேர்தலில் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிட்ட எம். குணதிலக்காவுக்கு அளிக்கப்படும் ஒவ்வொரு வாக்கும் தமிழரசுக் கட்சிக்கு அளிக்கப்படும் வாக்கு என்று மூதூரில் ரத்தொட்ட எம். பி. திரு. லி. முனவீரா சொன்னாரே! அப்படியானால்......?

ப: திரு. முனவீரா சொல்வது உண்மையானால் மூதூரிலுள்ள 9,000 சிங்களவர்களில் 6000 பேர் தமிழரசுக் கட்சியை ஆதரிப்பவர்களாவர்.

ஃ

"இருபா", கல்முனை.

கே: ஒரு கூட்டமோ சபையோ நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது ஒருவருக்கு இருமலோ, கொட்டாவியோ வந்துவிட்டால் சமூகமாயிருக்கும் அனைவருக்கும் தொடர்கிறதே ஏன்?

ப: கூட்டத்தில் இருமல் வருபவர்கள் வெட்கத்தால் அதனை அடக்கிக்கொண்டிருப்பார்கள். ஒருவர் துணிச்சலுடன் இருமிவிட்டால், அதுவரை அடக்கிக் கொண்டிருந்தவர்களும் தத்தம் இருமலைக் கட்டவிழ்த்துவிடத் தொடங்கி விடுவார்கள். கொட்டாவியும் அப்படியே.

ஃ

ரூ. மரியதாஸ், உருத்திரபுரம்.

கே: நீர் ஏன் அதிகமாகப் பெண்களை இழிவுபடுத்திவரும் கேள்விகளுக்கு விடை அளிக்கின்றீர்?

ப: இழிவுபடுத்துவதன்று...இதமாக இடித்துரைத்துத் திருத்துவது.

ஃ

எம். ஜெயம், மல்லாகம்.

கே: உங்கள் மூளையை யாராவது கேட்டால் கொடுப்பீரா?

ப: யார் ஐயா, அந்த மூளையில்லாத மனிதன்?

ஃ

தங்கமலர் சோமசுந்தரம், யாழ்ப்பாணம்.

கே: இக்காலத்து ஆண்கள் வெள்ளை நிறப் பெண்கள்தான் வேண்டும்—கறுப்பு நிறப் பெண்கள் வேண்டாம் என்கிறார்களே! காரணம் என்ன?

ப: நிச்சயமாக நிறத்துவேஷமல்ல—மனதின் மாசுதான் காரணம்! வெண்மையில் மென்மை இருக்கிறதென்று தவறாகக் கருதும் ஆண்கள் தலையில் கருமையைச் சுமக்கிறார்களே! (முடியைத்தான் குறிப்பிடுகிறேன்.)

ஃ

க. கனகசபை, அம்பாறை.

கே: வர வர இளங் குமரிகளின் கவுண் (உயரத்தால்) உயர்ந்து கொண்டு போவதேன்?

ப: கோடைகாலமாதலின் காற்றோட்டத்துக்காக...




# வாழ்க்கையின் சின்னம்! வாழ்வின் புத்துயிர்!!

ரிஷி சாலாமிஸ்ரி லேகியம் நரம்புத்தளர்ச்சி முதலிய பலவீனங்களை ஒரே நாளில் நிவிர்த்தியாக்கும்,

இதற்கு அத்தாட்சியாக கீழே குறிப்பிடும் நற்சாட்சியை வாசியுங்கள்.

Aynr. Dr. T. H. மதுரநாயகம், கதிர்காமம்.
வைத்தியராஜ் M/s T. D. மதுரநாயகம் & கோ., 12-4-1962
ஞானசுந்தர வைத்தியசாலை,
கொழும்பு.

ஐயா

இன்று எனக்கு 85 வயதாகிறது. நான் கடந்த 55—60 வருடகாலமாய் ஞானசுந்தர வைத்தியசாலையில் பலவிதமான வியாதிகளுக்கு வைத்தியம் செய்வித்து, பலவித தயாரிப்பு மருந்துகளும் வாங்கிச் சாப்பிட்டிருக்கிறேன். பூரண சுகமடைந்திருக்கிறேன். முக்கியமாகத் தங்களின் கருணைக்கிழங்கு லேகியம், ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம், ரிஷி சாலாமிஸ்ரி லேகியம் மிகவும் கைகண்டது.



உன்னத தயாரிப்பு என்பதை முழு மனதோடு உறுதிப்படுத்துகிறேன். இந்த நற்சாட்சி தாங்கள் எவ்விதத்திலும் பிரசுரஞ் செய்யலாம். தங்களின் வைத்திய சிகிச்சையாலும், மருந்துகளின் மகிமையாலும் இன்னும் சுகதேகியாக வாழுகிறேன்.

இங்ஙனம்
லெச்சுமணன் சாமியார்

**30 நாள் லேகியம் விலை ரூ. 10-00**
**15 நாள் லேகியம் விலை ரூ. 6-00**

தபாற் செலவு முறையே -/95.

## ஞானசுந்தர வைத்தியசாலை,
## T. D. மதுரநாயகம் & கோ.,

187, செட்டியார் தெரு. கொழும்பு-11.

விபரமடங்கிய கெட்லாக் இனமாக அனுப்பப்படும்.


திருவாளர்
குயுக்தியார்
C/o சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தித்து வந்தவை

காலைக்கண்டன்

## திருமலையில் தகா(த)கிளை

ஒடி ஒடி அலுத்து விட்டால் ஓய்வெடுத்தல் நல்லது. "ஓட ஓட விரட்டினாலும் ஒழிய மாட்டேன்" என்றலைகளையச் சேர்ந்தது தமிழ் காங்கிரஸ். பல தடவைகள் மக்கள் மன்றத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்ட இந்த தலை வாலில்லா முண்டம் உயிர்பெற்று உலாவ இன்னும் சந்தர்ப்பம் கிடைக்காதா? என்று எண்ணி ஏங்குகிறது.

தமிழ்க் காங்கிரசை ஆதரவு காட்டி வளர்த்த தந்தை திரு. பொன்னம்பலமும் அதை உதவாக்கரைப்பிள்ளை என்றே எண்ணுவோ, கைவிட்டு விட்டார். ஆனால் வால் பிடித்த வளவளாக்கள் மீண்டும் வாலாட்ட ஆரம்பித்துள்ளன.

திருகோணமலையிலுள்ள சில பிரமுகர்களுக்குத் திடீரென "இந்த வால்கள்" சில அழைப்பிதழ்களை அனுப்பி ஒரு கூட்டத்தைக் கூட்டின. பெருந் தெருப்பாடசாலையில் சென்ற வாரம் இக் கூட்டம் நடைபெற்றது. யார் யார் அழைப்பிதழ்களைக் கையில் வைத்திருந்தார்களோ அவர்கள் மட்டுமே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். மொத்தம் 22 பேர் மட்டும் தான் (கொழும்பிலிருந்து சென்றவர்களையும் சேர்த்து) கூட்டத்திற்குச் சமுகமளித்தனர். அவர்களில் 13 பேர் அரசாங்க உத்தியோகத்தர்கள். திரு. ஏரவணமுத்து ஏதோ "கொள்கை" என்ற மந்திரத்தை உச்சாடனம் பண்ணினாராம். இம்மந்திரத்துக்கு அங்கு சமுகமளித்த எவரும் மசியவில்லையாம்.

திருமலை த. கா. கிளைக்கு, முன்னாள் மூதூர் அபேட்சகர்களில் ஒருவரான திரு. ஜே. துரைரத்தினத்தை உபதலைவராகப் பிரேரித்தனராம். அவர் அதற்கு மறுத்து விட்டாராம். வேறு சில (அ)பாக்கியவான்களைத் தேடிப் பிடித்து பதவிகள் கொடுத்து விடயத்தை முடித்தனராம்.

உள்ளே சென்று அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கண்டு 'ரசிக்க' எத்தனையோ பேர் முயற்சித்தும் எது வித பலனும் கிடைக்கவில்லை. உள்ளே சென்றிருந்தவர்களும், த. கா. பிரமுகர்களை வெளியேயுள்ள மக்களிடம் பகிரங்கமாக பிரசாரம் செய்ய வேண்டுமென வற்புறுத்தினார்களாம். கூட்டத்துக்கு வந்தவர்களோ சிறு தொகையினர், அவர்களுக்குள்ளேயே இப்படிக் கண்டனக் குரல் கிளம்பும் என்று கொழும்பிலிருந்து சென்ற த. கா. (த) வர்கள் எண்ணியிருக்கவில்லையாதலால் "சமாளிபிக்கேஷன்" செய்து சுபமாக முடிவு விழாவும் நடத்தினார்களாம்.

## பாம்புக்குப் பால் வார்த்தால்......?

திருமலை நகரசபைத் தலைமைப் பீடத்தின் போக்கு தமிழ் பேசும் மக்கள் கவலை கொள்ளும் அளவுக்கு நிலைமையை மோசப் படுத்திக் கொண்டு வருகிறது. உள்ளே நிலவும் சூழல்கள் எண்ணற்றவை. அவற்றை வெளியே கிளறிவிட்டு வேடிக்கை பார்க்க விரும்பவில்லை. ஆனால் இன்றைய நிலையிலே நமது இனத்துக்கு இழிவு தேடித் தரத்தக்க செயல்களில் திருமலை நகரசபை நடந்து கொள்ளுவது வருந்தத்தக்கதே.

திருமலை நகரசபையின் செயலாளராக தற்பொழுது ஒரு சிங்களவர் நியமனம் பெற்றுள்ளார். தமிழ்பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில், பொன்னெழுத்தால் பொறிக்கப்பட வேண்டிய இடங்களில் முன்னிற்பது திருமலை. ஆனால் இத்தகைய இழிநிலையை உருவாக்க முனைந்தது தவறாகும்.

ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட நகரசபையில், எண்மர் தமிழ் பேசும் இனத்தைச் சேர்ந்தவர்கள். எஞ்சியுள்ள சிங்களவர் இன்று உப தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். தமிழ் பேசும் மக்களின் பெருந்தன்மை இங்கு தொனித்தாலும், அதற்காகப் பெருமைப்பட வேண்டியிருப்பினும், காலதேச வர்த்தமானத்தைக் கொண்டு, வெட்கித் தலைகுனியவும் வேண்டியதுதான். சிறுபான்மையினரை எப்படி நடத்த வேண்டுமென்பதை, இனவெறி பிடித்த ஆட்சியாளர்களுக்கும், அவர்களது சமுகத்துக்கும் உணர்த்துவதாயிருப்பினும், இச்செயல் எவ்வகையிலும் கண்டிக்கப்பட வேண்டியதே!

திருமலையில் காட்டப்படும் கருணை-விஷப் பாம்புக்குப் பால் வார்க்கும் வீண் வேலையை ஒத்ததாகும் என்பதை அப்பாக்குட்டி அம்மான் நகரசபையாருக்கு அறிவுறுத்த விரும்புகிறார்.

## சந்திக்கு வர முயல வேண்டாம்

திருமலை நகரசபைத் தலைவர் மறைமுகமாகவும், நேரடியாகவும் திருமலை மக்களுக்கு தீங்குகள் விளைவித்து வருகிறாராம். ஆதார பூர்வமாகப் பல விடயங்கள் நமது அம்மானுக்குக் கிட்டியுள்ளன. நல்லபடி நடந்தால் நல்லது. தொடருமானால்...? சந்திக்கு வரவேண்டியிருக்கும்!

## கற்றுத்தான் என்ன கண்டார்?

அரசாங்க எழுதுவினைஞர் ஒருவர் (E. C. C. gr. II) தொழிற் கந்தோரின் நிர்வாகப் பகுதியில் வேலை செய்து வந்தார். சென்ற மாதம் அவருக்கு மாற்றல் கட்டளை வந்தது, தொழிலாளர் நல்வுரிமைப் பகுதிக்குப் போகுமாறு. அவர் அந்தக் கட்டளையை ரத்துச் செய்யுமாறும், தனது காலம் இப்பகுதியில் முடியவில்லை யென்றும் விண்ணப்பித்திருந்தார். அவருக்குக் கிடைத்த மறுமொழி, 'அந்த இடம் சிங்களத்தில் வேலை செய்யத் தேர்ச்சி பெற்ற ஒருவருக்கே உரியது, ஆகவே மாற்றம் அவசியம்' என்று. பின்னர், சம்பந்தப்பட்ட நபா தாம் சிங்களத்தில் வேலை செய்யத் தேர்வு பெற்றவரென்பதையும் தாம் சிங்களத்திலேயே தற்போது வேலை செய்கிறேனென்றும் தமது திறமையை எடுத்துக் காட்டினர். அதற்கு எழுத்தில் பதில் கிடைக்கவில்லை! தொழிற் பகுதி ஆணையாளர் அவரைக் கூப்பிட்டு 'இதுபற்றி வீண் தொல்லை கொடுக்காதீர், இந்த இடம் ஒரு சிங்களவருடையது. நீர் மாற்றல் கட்டளையின்படி தொ. ந. தி. பகுதிக்குப் போக வேண்டியதுதான்' என்று கூறினராம்! தற்போது சிங்களம் கற்று வரும் மற்றையோருக்கும் இது பாடமாயமையட்டும்.

கள். எவ்வளவு அழகாக இருக்கும், மதிப்பாக இருக்கும்" என்று நரிப் பிரசங்கம் செய்கிறாராம்.

இவரது இன்றைய வயது 58. திருவாசகம் தேவாரம் முதலிய நற்சிந்தனைப் புத்தகங்கள் படிக்கும் இத்தருணத்தில் சிங்கள கீழ் வகுப்பு புத்தகம் ஒன்றை எங்கும் கொண்டு திரிந்து "ததிம் கரணதோம்" போடுவது மல்லாமல், அங்கு வேலை செய்யும் தமிழ் ஊழியர்களை அண்டி, கிண்டலும் கேலியும் செய்கிறாராம்.

இன்னும் இரு வருடங்களில் இளைப்பாறப் போகும் இவர் சிங்களம் படித்து என்ன பிரயோசனம்? என சிங்கள நண்பர்கள் கேலி செய்யும் போது, 'எனக்கு பிள்ளை குட்டி ஒன்றும்

யாடப்பட்டன. இவற்றையெல்லாம் மறந்து விட்டு இன்று சிங்கள ஆட்சிக்கு அடிவருட ஆரம்பித்துள்ளாராம். சந்தி சிரிக்கும் வகைக்கு தன்னை ஆட்படுத்தாமலிருந்து விட்டால் அதுவே போதும்.

## மகா மகானுபாவர் இவர்!

வல்வெட்டித்துறையில் மந்திரிமாருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு சம்பந்தமாக மென்மேலும் நமக்கு தகவல்கள் வந்த வண்ணமே இருக்கின்றன. வரவேற்புக்கான ஒழுங்குகளைச் செய்த பட்டினசபைத் தலைவர் திரு. நடராசாவுடன் யாழ்ப்பாண எம். பி. திரு. அல்பிரட் துரையப்பாவும் பலாலி விமான நிலையம் சென்று மந்திரிகளுக்கு மாலையிட்டு வரவேற்புக் கொடுத்தாராம்.

திரு. நடராசாவின் மீது பல ஆயிரக் கணக்கான ரூபாய் மோசடிக் குற்றச் சாட்டுக்களை பட்டினசபை கொண்டுவந்திருந்ததாம். விவகாரம் கோர்டு வரை சென்று, அங்கு தண்டம் விதிக்கப்பட்டிருந்ததாம். பணத்துக்குரிய கணக்கைக் காட்ட முடியாது போய் விட்டதாம், திரு. நடராசாவுக்கு. சொத்துக்களும் இல்லாது போகவே பணம் கட்டவோ அல்லது அரசாங்கத்தால் தொகையை வசூலிக்கவோ முடியாது போய் விட்டதாம்.

இதுமட்டுமல்லாது வேறு மொரு பணம் கையாடல் செய்யப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டு, சட்டக் கரங்கள் திரு. நடராசாவை நோக்கி நீண்டனவாம். இவற்றுக்கெல்லாம் ஒரு பரிகாரம் தேடும் வகையில் மந்திரிகளைக் காக்காய் பிடிக்க முயன்றுள்ளார் இவர். அதன் ஒரு படலம்தான் மந்திரிகள் வரவேற்பு.

ஜூன் 5-ம் திகதி பருத்தித்துறையில் துக்கதினத்துக்காகக் கடைகளைத் திறந்து வைக்க பெருமுயற்சியும் எடுத்துள்ளார் இந்த "மகானுபாவர்". அதுமட்டுமா? கடந்த பொதுத் தேர்தலின் போது தமிழ்க் காங்கிரஸ் டிக்கட்டில் பருத்தித்துறையில் தேர்தலுக்கு நின்று, மண்கவ்வியுமிருக்கிறார்.

திரு. நடராசாவினுடைய யோக்கியதாம்சங்களை அறிய விரும்பினால், 18—8—1961-ல் வெளியிடப்பட்ட 12609ம் இலக்கமுடைய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் காணலாம்.

## பெந்தக்கோஸ்த சபையில் வெறியாட்டம்

பெந்தக்கோஸ்த சபையை இந்நாட்டில் வித்திட்டு விருட்சமாக்கியவர் ஒரு தமிழர். பல ஊர்களிலும் பல கிளைகளை அமைத்து தக்க பணியாற்றி வந்த இச் சபையினுள் இன்று மொழி வெறியும், இனவெறியும் புகுந்து கொண்டுவிட்டன. இதன் காரணமாக எழுந்த பூசல்கள் எண்ணற்றவை.

கடந்த ஏப்ரல் மாதம் நமது அப்பாக்குட்டி அம்மானிடம் இப் பெந்தக்கோஸ்த சபையின் அந்தரங்கங்கள் சில அகப்பட்டிருந்தன. சென்ற வாரம் இந்தச் சபையின் இனவெறிக்கு ஒரு உயிர் பலியிடப்பட்டுள்ளது. அடுத்த வாரம் சந்தியில் இந்த விவகாரங்கள் யாவும் இடம் பெறும்.

—அப்பாக்குட்டி அம்மான்.

## சிங்கள சித்திக்கு விருந்து?

அரசாங்க வெளியீட்டு இலாகாவின் உதவி அதிகாரி ஒருவர் சிங்களச் சோதனையில் சித்தியெய்திவிட்டார். இந்த மகத்தான செயலைப் புரிந்தவீராதி வீரர், சூராதி சூரர் தமது நண்பர்களுக்கு விருந்து வைத்துள்ளார். தமது சிங்கள நண்பர்களையும் விருந்துக்கு அழைத்து தனது "சிங்களத் தேர்ச்சி" வீரப் பிரதாபங்களை விவரித்தாராம்.

ஐயா வீரசிகாமணியே! உங்கள் அதிதீரபராக்கிரம செயலுக்காக உமக்கு அப்பாக்குட்டி அம்மான் ஒரு செல்லரித்த பனை ஓலை "மெடல்" பரிசு தருகிறார். விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளும்.

## மீசை நரைத்தாலும் ஆசை?

தபாற் தந்திப் பகுதியில் உள்ள ஊழியர்களில் தொண்ணூற்றொன்பது வீதமானவர்கள் சிங்களம் மாத்திரம் சட்டத்தை எதிர்த்து போராடிக் கொண்டிருக்கும் போது, தபாற் கந்தோர் சேமிப்பு வங்கியில் உள்ள ஓர் வயது முதிர்ந்த பெரியவர், "எனக்குப் பொறி ஒன்றில் [illegible] வெட்டிப் போட்டு பாருங்

இல்லை. உள்ள காசெல்லாம் குதிரை வாலுக்கு அர்ப்பணித்து விட்டேன். மிகுதியாக உள்ளதை உங்கள் தென்னாட்டு சிங்கங்கள் வீட்டை உடைத்து அபகரித்து விட்டனர். நான் கண்ட மிச்சம் இந்த சிங்கள புத்தகமும், அதன் கீழ் உள்ள 'குதிரை வால்' புத்தகமும் தான்" எனக் காரணம் காட்டுகிறாராம்.

## சூடுகண்ட பூனை...

இரத்தினபுரி கச்சேரியில் உயர் பதவி ஒன்றிலிருக்கும் தமிழர் ஒருவர் தமக்குக் கீழுள்ள உத்தியோகத்தர்களுக்கு தீர்க்க தரிசனம்கூறி வருகிறாராம். சிங்களம் கற்பதனால் ஏற்படக் கூடிய நன்மைகளை விவரித்து, அவர்களைச் சிங்களம் படிக்கத் தூண்டுகிறாராம். மற்றவர்களைப் பயமுறுத்தியும் பார்க்கிறாராம்.

சூடு கண்ட பூனை அடுப்படியை நாடாது என்பது பழமொழி. அப்படி இருக்க, இந்த மகான் தனக்கு, 1958-ம் ஆண்டுக் கலவரத்தின் போது, ஏற்பட்ட துன்பங்களை மறந்து விட்டார் போலும்.

1958-ல் அவருடைய மகனின் திருமணம் ரத்மலானையில் நடைபெற்றது. மணப்பந்தல் காடையர்களால் தீக்கிரையாக்கப்பட்டது. பொருட்கள் யாவும் சூறை

நம்பிக்கையான
நைலோன்

வலைகளுக்கும், நூல்களுக்கும்
சேகரம் அன் சன்ஸ்
74, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 693

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைப் பூங்கா

# சோமசுந்தரனார்

—ஆசிரியர் ச. அமிர்தநாதர்—

தண்டமிழின் சுவைமாந்தித் தரணிக் கீந்த
    தாதாவே, இனியகவி மாரியின் ஊற்றே!
புண்ணியமை பாவினைமை உண்டோம், உன்றன்
    பைந்தமிழின் கவிதைக்கு நிகர்சவண் டோமோ?
விண்ணொளிபோல் கவிவடியும் மேதை யுள்ளம்;
    வித்தகனே, தமிழ் மலராப் பணி செய் தோனே!
எண்ணத்தில் இலங்கிடும் நின் கவிதை வார்ப்பே;
    ஈழத்தின் புகழும் அதிற் சேர்ந்தி லங்கும்.

சிந்தையிலே தித்திக்கும் இனிமை உண்டு,
    செந்தமிழின் சுவையுண்டு, நினது பாட்டில்
வந்து பல சிறுவர்கள் மகிழ்ந்தா டாட
    வளமான கற்பனைகள் வகையாய் உண்டே;
அந்தமிலாத் தேவருண்ணும் அமுதமென்றும்
    அள்ள அள்ளக் குறையாது நின் படைப்பில்
எந்தையே நின்தமிழ்த்தொண் டேற்றி நாளும்
    இறும்பூதே எய்துமெங்கள் உள்ள மன்றோ?

'நாமகளின் புகழ்மாலை' நமக்கெந் நாளும்
    நன்மொழியின் கனிச்சுவையை விளக்கி நிற்கும்;
தேமதுரத் 'தமிழின்பம்' தெவிட்டா தென்றும்;
    தித்திக்கும் இலங்கை வளம் சுவைய முது;
பாமணக்கும் 'தந்தையார் பதிற்றுப் பத்'தில்
    பரிமளிக்கும் நின்புலமை பாரில் என்றும்;
வாம மலர்க் கனிக்கொத்துத் தமிழ்ச் சிறார்க்கு
    வற்றாத பாகை அள்ளி வாரி ஊட்டும்.

——∗——∗——

# திருமுனிவன் புகழ் வாழி!

—கா. சி. ஆனந்தன்—

ஊனுருக உயிருருக
    உளமுருக உணர்வுருக
நானுருக இசையினுயிர்
    நாட்டியவன் புகழ் வாழி!
தானுயர உலகெல்லாம்
    தமிழுயர இனமுயர
தேனமுத நூல் யாத்த
    திரு முனிவன் புகழ் வாழி.

மட்டு நகர் வாவி மகள்
    மடிங்கிடந்து பண்முரசு
கொட்டியவள் எவளென்று
    கூறியவன் புகழ் வாழி!
கட்டியதன் காவியிலும்
    கவித்துறவு பூணுத
குட்டுவனின் புத்திளவல்
    குல முனிவன் புகழ் வாழி!

வரை நீள யாதபடி
    உட்கார்ந்த துறவிகளின்
சிறைவிட் டூறளவு
    சிறப்புடையான் புகழ் வாழி!
கிரை எழிற் தண்டு நிகர்
    இனிமொழியார் விளையாடும்
காரை நகர் மண் தந்த
    கவிமுனிவன் புகழ் வாழி!

குபுகுபெனத் தமிழார்வம்
    கொழுந்துவிட வழி செய்தான்
விபுலாநந் தப்பெரியோன்
    வீர மகன் புகழ் வாழி!
கபடறுந்த நெஞ்சுடையான்
    கல்லடியில் துயில்கின்றான்
தபசிநிலை யார் கண்டார்?
    தமிழ் முனிவன் புகழ் வாழி!

# செந்தமிழ் கவிதைகள் செய்த சோமசுந்தரன் வாழ்க

பத்தாயிரத்துக்கு மேலான பாங்கான கவிதைகளை யாத்த புலவன் சோமசுந்தரனுக்கு நாடெங்கும் விழா வெடுக்கப்படுகிறது. நாவலரும் பாவலரும் போற்ற பைந்தமிழுக்கும், சைவத்துக்கும் சேவை செய்து "தங்கத் தாத்தா" என்று தரணி போற்ற வாழ்ந்து 1953-ம் ஆண்டு ஆனி இருபத்தாறில் புகழுடம் பெய்திய புலவருக்கு எமது அஞ்சலி—



சோமசுந்தரப் புலவர்

ஆடிப் பிறப்புக்கு நாளை
    விடுதலை
ஆனந்தம் ஆனந்தம்
    தோழர்களே!
கூடிப் பனங்கட்டிக் கூழும்
    குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம்
    தோழர்களே!

பல வருடங்கள் உருண்டோடிவிட்டன. ஐந்து வயதில் பள்ளியில் ஆறு......... ஆவன்று......பயிலும்போது செவிகள கேட்டு இன்புற்றன, இப்பாட்லே. கொழுக்கட்டையில் கொள்ளை ஆசை கொண்ட எனக்கு இந்தப் பாட்டு கொழுக்கட்டை போன்றே இனித்தது.

துள்ளித் திரியும் பள்ளிப் பருவத்தினர் பாடி மகிழத் தக்க இத்தகைய எத்தனையோ கவிதைகளை ஈழத் தமிழ்பேசும் மக்களுக்கு அளித்த புலவன் மறைந்து ஆண்டுகள் பல உருண்டோடி விட்டன. ஆனால் அப்புலவன் விதைத்த கவிதைச் செடி எத்தனையோ இளம் உள்ளங்களில் வேரூன்றி, இன்று பெரு விருட்சமாகியிருக்கிறது.

வயது செல்லச் செல்ல குழந்தைகளின் தன்மையும் ஏற்படுவது இயற்கை, சோமசுந்தரப் புலவர் அவர்களுக்கும் வயது ஏற ஏற குழந்தைக்குரிய உள்ளம் மிளிர்ந்து வந்துள்ளதை, அவர் கவிதைகளில் காண முடிகிறது.

சைவம் வளர்த்த பெருங் குடியில், யாழ்ப்பாணம் நவாலியூரிலே சோமசுந்தரப் புலவர் பிறந்தார். தமிழ்ப் பற்றும், சைவசமயக் கோட்பாடுகளில் நாட்டமுமுடைய கதிர்காமருக்கும், இலக்குமிப் பிள்ளைக்கும் புதல்வராக 1878ல் பிறந்தார் சோமசுந்தரப்புலவர்

தமது இருபதாவது வயதுக்குள்ளாகவே தமிழும் ஆங்கிலமும் கற்றறிந்து ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார். சைவ சித்தாந்த நூல்களில் ஆராய்ச்சி செய்து சமய விருத்திக்கான சேவைகள் புரிய திடசங்கற்பங் கொண்டார். தமது ஓய்வு நேரங்களை யெல்லாம் தமிழ் நாற்குவியல்களிலேயே செலவு செய்தார்.

எவ்வளவு கற்றாலும், குருவில்லா வித்தை உதவாது என்றுணர்ந்தார். ஒரு ஞானகுருவைத் தேடலுற்று, முருகன் அருளால் அரிய வாய்ப்புப் பெற்றார்.

## செல்வி புஷ்பா

பெங்களூரிற் பிறந்த ஞானியார், சுப்பிரமணியம் என்னும் பெயருடையார், சோமசுந்தரப் புலவரைத் தமது சீடர்களில் ஒருவராக்கி ஞானோபதேசஞ் செய்தார்.

தமது இருபத்தெட்டாவது வயதில் புலவர் இல்லறத்துட் புகுந்து வள்ளுவன் விதிப்படி வாழ்வாராயினர்.

கலையார்வம் மிக்கவருக்கும், கவிஞருக்கும் வறுமை, நோய் ஆகிய பிணிகள் அணிகலன்களாகும், நமது புலவனும் இதற்கு விதிவிலக்கல்ல. எத்தகைய வருத்தங்கள் தமக்கு வந்துற்றபோதும் கவலைகொள்ளாது முருகனையும், கலைவாணியையும் கருத்திற்கொண்டு தமிழ்ப் பணி புரிந்து வருவாராயினர்.

ஏறத்தாழ மூவாயிரம் மாணவர்களைத் தமது சீடர்களுக்குச் சமமாகக் கொண்ட சோமசுந்தரப் புலவர் தமிழ் இலக்கிய, புராண இதிகாச நூல்களைக் கற்பிப்பதில் நிகரற்று விளங்குவாராயினர். தென் இந்தியத் தமிழ் பேரறிஞர்களான மறைமலை அடிகளார், சோமசுந்தர பாரதியார் போன்றோர், 'தமிழ் வளர்க்கும் பெருமகனார் சோமசுந்தரர்' என்று போற்றிப் புகழ்ந்தனர் புலவரை.

பத்தாயிரம் பாடல்களுக்கு மேல் யாத்த புலவன் செந்தமிழ்ச் செல்வச் சிறார்களை மனதில் கொண்டு இயற்றிய எண்ணற்ற பாடல்கள், தேன் சுவையை மிஞ்சிவிட வல்லன,

இப்பத்தாயிரம் பாடல்களும் சிறுவர் இலக்கியம், தோத்திர இலக்கியம், சித்தாந்த இலக்கியம், சரித்திர இலக்கியம், உரை நடை இலக்கியம் என ஐந்து பிரிவுகளாக வகுக்கப் பட்டுள்ளன.

சோமசுந்தரப் புலவர் 1953ம் ஆண்டு ஆனி இருபத்தாறில் இவ்வுலகை நீத்துப் புகழுடம்பு எய்தினார்.

வாழ்க அவர் நாமம்!

## பயிற்சி வகுப்புகள் தமிழில் இல்லை

ஆசிரியரின் ஏமாற்றம்

தமிழாசிரியர்கள் ஆசிரிய ஆலோசக தொழில் வழிகாட்டுப் பயிற்சியை இனிமேல் சிங்களம் அல்லது ஆங்கில மொழி மூலம்தான் பெறலாம். 1957-ம் ஆண்டு அக்டோபர் மாத முதல் தமிழில் நடைபெற்று வந்த இப் பயிற்சி வகுப்புகள் இம்முறை நிறுத்தப்பட்டதே இதற்குரிய காரணமாகும்.

சிங்கள மொழி மூலம் பயிற்சி பெறுபவர்களும் கூட கண்டிக்கோ அல்லது கொழும்புக்கோ தான் செல்ல வேண்டும். ஏனென்றால் இவ்விரு இடங்களில் மட்டுமே இப்பொழுது இப் பயிற்சி வகுப்புகள் நடைபெறுவது குறிப்பிடத் தக்கது. தமிழாசிரியர்கள் வித்தியாபகுதியாரின் இந்நடவடிக்கையில் ஏமாற்றமும் மனவேதனையும் அடைந்துள்ளனர். ... இதுதானோ வென்று கேட்கின்றனர்.





ராஜ பீடி
ஸ்பெஷல்

ராஜபீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்
ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்
புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி
கொழும்பு-14.

டெலிபோன் : 2739


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ. தொ. காவின் உண்மை சொரூபம்!

## சுயநலத்துக்காகப் பொதுநலம் கைவிடப்படும் கைங்கரியம்

## 'லேக் ஹவுஸ்' பத்திரிகைகளின் இருட்டடிப்பு!

**இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நீண்ட காலமாக தமிழரசுக் கட்சிக்கு ஒத்துழைப்பு அளித்துவிட்டு இப்பொழுது தமிழரசுக் கட்சியின் செல்வாக்கைக் குலைக்கும் தவறான போக்கைக் கையாள்வதை இக் கட்டுரையாளர் ஆதார பூர்வமாகக் கண்டிக்கிறார். காங்கிரஸின் குற்றச்சாட்டையும் அதற்குத் தமிழரசுத் தலைவர் அளித்த பதிலையும் எடுத்துக் காட்டி, காங்கிரஸ் துரோகப் பாதையிற் செல்கிறது என்பதையும் ரத்தினச் சுருக்கமாக விளக்குகிறார்.**

வி. மனுநாயகம்

தமிழரசுத் தலைவருக்கு விடையளிக்கு முகமாக, ஜூன் மாதம் 23-ம் திகதி "டெயிலி நியூஸ்" இதழில் வெளியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பத்திரிகை அறிக்கை பொய்கள் நிரம்பியதாகக் காணப்படுகிறது. மலைநாட்டுத் தமிழருக்காகத் தளராது உழைத்து வரும் தமிழரசுக் கட்சியினதும், முக்கியமாக அதன் தலைவரினதும் சேவைகளைச் சிறுமைப்படுத்தும் முயற்சியாகவே அது தோற்றுகின்றது. இத்தனை வருட காலமும் போலல்லாமல், இப்பொழுது இ. தொ. கா. தமிழரசுக் கட்சியுடன் பொது நோக்குடையதாகத் தெரியவில்லை என்பது இவ்வறிக்கையிலிருந்து தெளிவாகிறது.

### முன்னணியில் இந்தியர் பிரச்சினை

இந்நாட்டில் குடியிருக்கும் இந்தியத் தொழிலாளரின் நியாயமான கோரிக்கைகளுக்கு இடைவிடாத ஆதரவு அளித்து, அவர்கள் சம்பந்தமாகச் செய்யப்பட்ட உறுதிகளைக் கடைப்பிடித்த ஒரு கட்சி உண்டென்றால், அது தமிழரசுக் கட்சியே.

நல்லதிலும் கெட்டதிலும், பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியிலும் அவர்களுடைய உரிமைகளை அது உண்மை விசுவாசத்துடன் கவனித்து வந்துள்ளது. அது தனது திட்டத்தின் முன்னணியில் இந்தியர் பிரச்சினையை வைத்து வந்ததோடு, அதற்காகச் செய்யப்படும் எந்தத் தியாகத்தையும் பெரிதென அது கருதவில்லை.

### லோபித்தனம்

தமிழரசுக் கட்சியுடன் இதுவரை வருடங்களாக ஒத்துழைத்து, அதன் சேவைகளின் பலன்களையும் பெற்றுக் கொண்டு, இப்பொழுது அதற்கெதிராக விதண்டாவாதங்களிலும், தனது இயக்கத்துக்கே மதிப்புத்தராத முறையில் பொய்ப் பிரசாரங்களிலும் இ. தொ. கா. ஈடுபடுவது ஆச்சரியந்தருவதாகவே இருக்கிறது.

தமிழ்க் காங்கிரசுக்கு இன்னுமொரு மந்திரிப்பதவி அளிக்கப்பட்டிருந்தால், இந்தியப் பிரஜாவுரிமை மசோதாவுக்கெதிராக திரு. செல்வநாயகமும் அவரது சகாக்களும் வாக்களித்திருப்பார்களா என்பது பிரசினைக்குரிய விஷயமென்றும், பிரிவி கவுன்ஸிலுக்குச் சென்றிருந்த பிரஜாவுரிமை சம்பந்தமான வழக்கு பற்றி "தமிழரசுக் கட்சித் தலைவர் பிரயாசப் படுத்தியிருப்பது விளங்குவதற்குக் கஷ்டமாகவிருக்கிறது" என்றும், பாராளுமன்றத்துக்கு திரு. தொண்டமானை நியமிப்பதில் தமிழரசுக் கட்சிக்கு நேரடியான சம்பந்தம் எதுவுமில்லையென்றும்— இப்படியெல்லாம் கூறுவது, பிசாசுக்குக்கூடக் கொடுக்க வேண்டியதைக் கொடுக்கத் தயாரும் ஜோபித்தன மனப்பான்மையையே காட்டுகிறது.

மேற் குறிக்கப்பட்ட சம்பவங்களெல்லாம் சரித்திரத்தின் ஒரு பகுதியாகி விட்டன. எத்தனையோ வருட கால ஒத்துழைப்புக்குப் பின், தமிழரசுக் கட்சியைச் சிறுமைப்படுத்தும் நோக்கம் கொண்டிருக்கும் இ. தொ. காவின் இன்றைய மனப்போக்கைப் பொறுஇன அபிப்பிராயம்தான் சிறந்த முறையில் பரிசீலனை செய்ய முடியும்.

### பச்சைப்பொய்

மலைநாட்டுத் தமிழர்களின் பிரச்சினை 'பண்டா-செல்வா' ஒப்பந்தத்தில் இடம் பெறவில்லையென்று குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானதென்பது இப்பொழுது நிரூபிக்கப்பட்டு விட்டது. ஜூன் 23 'டெயிலி நியூஸ்' பத்திரிகையிலேயே, திரு. சுந்தரலிங்கத்துக்கு தமிழரசுத் தலைவர் அளித்துள்ள பதில் காணப்படுகிறது. அதில் ஓரிடத்தில் 'பண்டா—செல்வா' ஒப்பந்தத்தின் ஒரு பகுதி குறிப்பிடப்பட்டிருந்தது. அது பின்வருமாறு:—

'இந்திய வம்சாவளியினருக்குப் பிரஜாவுரிமை அளிப்பது பற்றியும், பிரஜாவுரிமைச் சட்டத்தைத் திருத்தியமைப்பது பற்றியும் சமஷ்டிக் கட்சியின் பிரதிநிதிகள் தமது கருத்துக்களைப் பிரதமரிடம் தெரிவித்ததோடு, பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணவேண்டுமென்றும் வற்புறுத்தினர். பிரச்சினை விரைவில் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படும் என்று பிரதமர் தெரிவித்திருந்தார்."

### உண்மை சொரூபம் அம்பலம்

மலைநாட்டுத் தமிழ் மக்களுக்காகத் தமிழரசுக் கட்சி ஆற்றிய சேவைகளைச் சிறுமைப் படுத்த முயன்ற இ. தொ. காவின் அறிக்கை, வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல், தமிழரசுக் கட்சியையும் அதன் தலைவர்களையும் இன ஒற்றுமையைக் குலைக்கும் நடவடிக்கைகளிலிருந்து விலகிக் கொள்ளும்படி புத்திமதியும் கூறுகின்றது! இ. தொ. கா., தங்களைப் போல, தமிழரசுக் கட்சியையும் வட, கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைக் காட்டிக் கொடுத்து, தங்கள் அடிச்சுவட்டில் நடந்து வர விரும்புகிறது போலும். இ. தொ. கா. இப்பொழுதுதான் அதன் உண்மை உருவத்தைக் காட்டுகிறது. ஒரு சில சுயநலவாதிகளுக்காக, லட்சக்கணக்கான நாடற்ற மக்களின் நலஉரிமைகளை அது கைவிடப்போகின்றதென்பது இதிலிருந்து நாம் பெறும் தவிர்க்க முடியாத தீர்வாகும்.

ஒலிவர் வென்டல் ஹோம்ஸின் வார்த்தைகளில்:

இறைவா, எங்களுக்கு மனிதரைத் தா! இந்த வகையநேரம்,
உயர்ந்த உள்ளங்களை, இரும்பு இதயங்களை,
உண்மை இலட்சியத்தை—
விரும்பும் கரங்களை—
வேண்டி நிற்கிறது!

(13-ம் பக்கம் பார்க்க)


## வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

### வேல் தைலம்
### மிகச் சிறந்த சஞ்சீவி

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்றாகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சீவி.

**விலை ரூபா 1-25**

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:

**S. P S. ஜெயம் கம்பெனி,**

மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

**M A R S. மனுவேல் நாடார் அன் கோ.,**

34, செட்டியார் தெரு,

கொழும்பு-11.



### சுதந்திரன் சந்தா விபரம்

இலங்கை—இந்தியா உட்பட

**வருடச் சந்தா ரூபா.10-00**

இன்றே உங்கள் சந்தாப் பணத்தை அனுப்பி சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளுங்கள்!


## மக்கள் குரல்

### இதுவும் ஓர் சூழ்ச்சி!

சிங்களத் தேர்வுப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள் என்ற ஒரு செய்தியை வெளியிட்டிருக்கின்றனர் நம் தனிச் சிங்கள அரசாங்கத்தார். பரீட்சைக்கு இருந்தவர்களின் தொகையைக் கூட ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கிக் காண்பிக்கின்றனர். இந்தப் பரீட்சையில் ஒன்றும் உருப்படியாக எழுதாதவர்கள், வேண்டுமென்று தாறுமாறாக எழுதினவர்கள், பாதிச்சோதனைக்குப் போகாதவர்கள் ஆகிய எல்லோரையும் பாஸ் பண்ணியிருக்கிறார்கள். எவ்வளவு தாராள மனப்பான்மை இந்த அரசாங்கத்துக்கு - அதுவும் இந்தத் தமிழர்கள் மீது!

முன்பெல்லாம் சிவில் சேவைப் பரீட்சையில் தமிழர்கள் அதிகமாகச் சித்தியடைந்து வந்தார்கள். ஆனால் இப்பொழுது தமிழர்களின் பெயரை மருந்துக்குக் கூடக் காணவில்லை! இலங்கையின் ஆட்சி சிங்கள மக்கள் கைக்கு மாறினபின்பு குறிப்பாகத் தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்ட பின்பு - தமிழர்களின் அறிவு ஆற்றல் நீடிரென்று மறைந்து விட்டது! பாரபட்ச மற்ற முறையில் பரீட்சை நடத்தப்பட்ட பொழுது முதலாவதாக அதிகாரகத் தேறிய சமுதாயத்திலிருந்து இன்று ஒருவராவது தேற முடியாமல் இருக்கின்றது. சிங்களத்தேர்வுப் பரீட்சையில் சிங்கள Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org பரீட்சையில் மட்டும் மிஞ்ச முடியாமல் போனது விந்தையே! முன்பைவிட இந்தத் தனிச் சிங்கள ஆரசாங்கம் காட்டும் தாராள மனப்பான்மையில் கொஞ்சத்தைப் பின்னதில் காட்டினாலாவது என்ன?

எப்படியும் தமிழ்மக்களைச் சிங்களம் படிக்கச்செய்ய வேண்டும் — அவர்கள் படியாது விட்டாலும் படிக்கிறார்கள் என்ற பிரமையை ஏற்படுத்தி அவர்களைச் சிங்களம் படிக்கச் செய்ய வேண்டும் - என்பதுதான் தனிச் சிங்கள அரசாங்கத்தின் நோக்கம். இதற்காக எப்படிப்பட்ட பொய்ப் பிரசாரத்தையும் செய்ய அவர்கள் தயங்கமாட்டார்கள். தமிழர்களுக்குச் சில பல சலுகைகளை—எழும்புத் துண்டை நாய்க்கு வீசுவது போல—கொடுக்கவும் அவர்கள் தயார்!

தமிழ் மக்கள்— குறிப்பாகச் சிங்களம் படிக்கத்தான் வேண்டுமென்று சொல்லுபவர்கள்—சிங்கள அரசாங்கத்தின் சூழ்ச்சியை நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

அருள்

பிக்கரிங்ஸ் வீதி,
கொழும்பு.

### மன்னிப்புக்கோர நேரிடும்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் ஆட்சிக்கு வந்த நேரத்தில் நான்கு அம்சத் திட்டத்தின்படி ஒரு அம்ச கோரிக்கையில் மலைநாட்டு மக்களுக்கு வாழ்வளிப்பதற்காகவும், மலைநாட்டு மக்களின் நலம்கருதி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு. தொண்டமான் அவர்களைத் தமிழரசுக்கட்சியினர் பாராளுமன்றத்தில் ஓர் நியமன அங்கத்தவராக நியமித்தனர். இதனை மறந்து இ. தொ. காங்கிரஸ் உறுப்பினர்கள் தொண்டமானைத் தமிழரசுக் கட்சியினர் பாராளுமன்றத்தில் நியமன அங்கத்தவராக நியமிக்கவில்லை என்று பத்திரிகைகளில் தவறான கருத்து வேறுபாடுகள் வெளியிட்டிருக்கிறார்கள். இச்செயல் தமிழ் மக்களை எனக்கும், என்னைப் போன்ற அபிமானிகளுக்கும் ஆத்திரத்தை (துக்கத்தை) கொடுக்கக் கூடியதாகும்.

இ. தொ. காங்கிரஸ் உறுப்பினர் பதவி மோகமும், பண மோகமும் பிடித்தலைகிறார்கள். இதையறியாத பாமர மக்கள் இக்கட்சியை உருப்படுத்த உதவிசெய்கிறார்கள். இப்பாமர மக்களுக்கு அறிவூட்டக் கூடியவர்கள் தோட்டப்பகுதியில் இல்லாதது பெருங்குறையே. செய்நன்றி கெட்ட இவர்கள் ஒரு நேரத்தில் தமிழரசுக் கட்சியினரிடம் மன்னிப்புக் கேட்டே தீருவர்.

எஸ். செல்வராசன்,
எட்டியாந்தோட்டை.

### மூதூர் வெற்றி

பண்புமிக்க தமிழ்பேசும் மக்கள் வாழ்வுக்குப் புத்துணர்ச்சியை ஊட்டியுள்ளது, தமிழரசாரின் மூதூர் வெற்றி.

பொய்ப் பிரசாரத்தினாலும், வீண் குற்றச்சாட்டுக்களாலும் மக்களின் மனதைத் தமிழரசாருக்கெதிராகத் திருப்பிவிட முனைந்த சந்தர்ப்பவாதிகள் சிலருக்கு மூதூர் முடிவு ஒரு பெருத்த அடியாகும்.

இனியேனாவது இந்தச் சந்தர்ப்பவாதிகள் தமிழரசுச் சிங்கத்திடம் வாலாட்டாது வாளாவிருப்பார்களா?

நயினை நாவுக்கரசன்.

# விபுலாநந்தன் காட்டிய கல்வி

பண்டைத் தமிழன் பண்பேர்டு போற்றிய இசையையும், இசையை எழுப்ப உதவிய இசைக் கருவிகளையும், இன்று வாழும் மக்கள் கனவிலும் காணவியலாது. பாசி படிந்த மட்டக்களப்பு வாவியிலே மீன்பாடக் கேட்ட வித்தகர் விபுலாநந்தர், பண்டையத் தமிழனின் இசைக் கருவியாம் யாழை யும், அதனை அமைத்திருந்த முறையினையும், வகுக்கப்பட்ட இசை இலக்கணத் தையும் நுருவித் துருவி ஆராய்ந்தறிந்து தமிழ் கூறும் நல்லுலகிற்கு யாழ் நூல் மூலம் அளித்தார். அடிகளாரின் உள்ளத்தையும், சேவையையும், ஆராய்ச்சிகளையும் ஓரளவு அளந்து அறிந்து அரும் பெரும் நூல்கள் பல தோற்றுவித்த திரு. அருள். செல்வநாயகம் "விபுலாலாநந்தன் காட்டிய கல்வி" பற்றி எழுதியுள்ளார்.

19—7—1962 அடிகளாரின் சிரார்த்ததினமாகும். அதனையொட்டியே இக்கட்டுரை பிரசுரமாகிறது.

அருள் செல்வநாயகம்

அறம் தழைத்து வளர்ந்தது தமிழகத்தில். தமிழகத்தின் பாற்படுவதே இலங்கை வள நாடும். கடலாற் சூழப்பெற்ற இலங்கை வளநாடு தனித்தமிழ் நாடாகவும் முன்னொரு காலத்திற் துலங்கியது. கால வேறுபாட்டால் இலங்கைக்கே சொந்தமான தமிழர்கள் வடக்கையும் கிழக்கையும் தங்களது தாயகங்களாகக் கொண்டார்கள்.

ஈழத்துத் தமிழர்கள் தமிழை வளர்ப்பதில் என்றுமே பின்நின்றதில்லை. தமிழே தங்களது உயிரெனக்கொண்டு எத்தனையோ அறிஞர்கள் வாழ்ந்து பெருமை ஈட்டினர்கள். அந்த வகையிலே தமிழனுக்காக வாழ்ந்து, தமிழைப் பேணி வளர்த்த பெருமை அருட்டிரு முத்தமிழ் முனிவரான விபுலாநந்த அடிகளாருக்கே சேரும்.

"தமிழ்ப்பணி செய்வதே என் கடன்" என வாழ்ந்து தமிழர்களுக்கு, தமிழுக்குக் காட்டியவர் அடிகளார்.

தமிழை அழகுபடுத்துவதே பிறந்ததின் பயனெனக் கண்ட அடிகளார் இல்வாழ்வைத் துறந்து துறவியாகித் தூய வாழ்வு வாழ்ந்து காட்டினர். அதன் பயனுகத்தான் தமிழர்களின் மனத் தாமரைகளில் "விபுலாநந்த அடிகள்" என்னும் பெயர் அழியாத இடமாகியது.

அடிகளாரின் ஊனுடம்பு மறைந்து பல ஆண்டுகளாகி விட்டன. அடிகளார் தமிழிலே அமரராகி விட்டார். யாழ் நூலாம் பெரும் நூல் அமரகாவியமாகிவிட்டது.

அடிகளார் தம் ஓய்வு நேர மனைத்தையும் தமிழ் அன்னைக்கே செலவிட்டார். அதனால் பத்திரிகை ஆசிரியர்களுக்கு ஏராளமான கவிதைகள் கிடைத்தன. கட்டுரைகள் கிடைத்தன.

இலங்கையின் கல்வித் தேவை பற்றி அடிகளார் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர் கண்டுணர்ந்தார். அவரது அன்றைய கண்டு பிடிப்பு ஆராய்ச்சி இன்று இலங்கைக்கு மிகவும் பொருத்தமானதாகவும், தேவையானதாகவும் அமைந்துவிட்டது.

அடிகளாரது ஞாபகார்த்தமான இந்த நன்னாளிலே அடிகளாரின் கல்விச் சிந்தனையை நினைவூட்டுவது இந்த நாட்டுக்கு, இந்த நாட்டுக் கல்வி அறிஞர்களுக்கு, ஆசிரியர்களுக்கு மிக மிக இன்றியமையாததாகும்.

இதோ அடிகளாரது கல்விச் சிந்தனை படியுங்கள். படித்துச் சிந்தியுங்கள்.

## உழைப்பின் அவசியம்

நாம் உழைக்க வேண்டியது அவசியமென்பது திண்ணமாகும். உழைத்து வேண்டிய ஊதியம் பெற வேண்டியது அவசியம். சிறிது ஆலோசிக்குமிடத்து நாம் நமக்கு அறிவு வந்தது



விபுலாநந்த அடிகளார்

முதல் கற்பதெல்லாம் எவ்வாறு பணம் சேகரிப்பது என்பதைப்பற்றி ஆலோசிப்பதும், யாதேனும் ஒரு தொழிலைக் கைப்பற்றி, அதில் தேர்ச்சிபெற முயற்சி செய்வதுமேயாகும். இதனுற்றுன் மதங்களெல்லாம், உண்மை உழைப்பை மேலானதாகக் கூறி, அதனைச் சரியாகச் செய்துவரல் கடமையென்றும் அவ்வழியே நற்கதி பெறக்கூடுமென்றும் கூறுகின்றன.

## தற்காலக் கல்வி ஏட்டுச்சுரைக்காய்

ஆயின் நம்நாட்டு தற்காலத்திய நிலைமையில் ஒவ்வொருவருக்கும் தாம் எத்தொழிலைப் பின்பற்றுவதென்று விளங்கவில்லை. விளங்குவதற்குத் தகுந்த ஏற்பாடுகளுமில்லை. தற்காலத்தில் போதிக்கப்படும் கல்விமுறை குறைகள் பல பெற்றிருப்பதனுலேயே, மேற்கூறிய கஷ்டங்கள் ஏற்படுகின்றன. பத்து வருஷங்கள் பள்ளியிற் படித்து பன்னிரண்டு ரூபாய் கட்டி பரீட்சையிற் தேறிய மாணவனும், அதன் மேலும் சில வருஷங்கள் படித்துச் சர்வகலாசாலையார் தந்த யோக்யதா பட்டம் பெற்றவர்களும் எவ்வேலைக்குச் செல்வதெனத் திகைக்கின்றனர். அவர்கள் காசு அதிகம் செலவிட்டுக் கற்ற கல்வி சிறிதும் அவர்களுக்கு உபயோகப்படுவதில்லை. ஏனெனில் அவர்கள் அவர்கள் கற்ற கல்வி மனதை ஓர் நிலைக்குக் கொண்டு வந்ததேயன்றி கைத்தொழிலேதேனும் செய்வதற்குப் பயன்படுவதில்லை. அதன் பயனுக நம் மாணவர்கள் சொற்ப சம்பளத்தில் குமாஸ்தா வேலைக்காகப் போட்டி போடுகின்றனர். அதையே பெருங் கௌரவமாக நினைக்கின்றனர்.

## கைத்தொழிற் கல்வி தேவை

ஆயின் குமாஸ்தாக்கள் வேண்டியவரையிருக்கின்றவாதவால், இக்காலத்தில் அவர்களை வேண்டுவார்களில்லை. நம் நாடோ தற்காலம் கைத்தொழில்களில் பயிற்சி பெற்றோரையே பெரிதும் வேண்டி நிற்கின்றது. வியாபாரங்கள் நடத்தவும், நாட்டிலுள்ள விளை பொருள்களைத் தகுந்தபடி விளைவித்து அவற்றை நம் நாட்டவர்க்குப் பயன்படுமாறு செய்யவும் போதுமான அறிவு நிறைந்தவர்கள் வேண்டும். ஏனெனில் நம்மவர்க்கு வேண்டிய பொருள் எல்லாம் இங்கேயே மலிந்து கிடக்கின்றன. அவைகள் தகுந்தபடி தயார் செய்யப்படாமல் பிறநாடுகளுக்குக் குறைந்த விலைக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பிறகு அப்பொருள்கள் நன்ருகப் பதனிடப்பட்டு மிகவும் உயர்ந்த விலைக்கு நம்நாட்டிலேயே விற்கப்படுகின்றன. இஃது வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழும் அறிவிலி செய்கை போலவேயிருக்கின்றது.

## சில உண்மைகள்

இதற்கெல்லாம் காரணம் யாது? நம் சிறுவர்கள் கற்கும் கல்வியேயாகும். தாய் மொழியை எவ்வாறு தகுந்த அளவுக்குக் கற்காது பிற மொழிகளைக் கற்கின்றனரோ, எப்படித் தாய் மொழி இரண்டாம் மொழியாயிற்றே, அது போலவே தாய் நாட்டிற்கு வேண்டிய வைகளைக் கல்லாது காலங் கழிக்கின்றனர்கள். அவர்கள் கல்விச்சாலைக்காலம் முடிவுற்றதும் யாதொரு வேலைக்கும் தகுந்தவர்களாகாது தவிக்கின்றனர். நம் சிறுவர்கள் ஒவ்வொருவரும் லட்சாதிபதியின் மக்களாயிருப்பின் இந் நிலைமை பற்றி வருந்த வேண்டியதில்லை.

(15-ம் பக்கம் பார்க்க)

# காயம் குணப்படும் முறை

## ஜெர்மன் நிபுணர் தரும் ஆச்சரியகரமான தகவல்

உடலில் ரணக்காயம் ஏற்பட்டால் அது குணமாவதற்கு உடம்பில் எவ்வித இயற்கை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தை ஒரு ஜெர்மன் சஸ்திர சிகிச்சை நிபுணர் கண்டு பிடித்துள்ளார். இதைக் கேட்டு நிபுணர்கள் கூட ஆச்சரியப்பட்டனர். ஒரு விபத்து ஏற்பட்டால் உதவிக்காக எச்சரிக்கைகள் எப்படி செய்யப்படுகிறதோ அதே மாதிரி உடலிலும் ஒரு இடத்தில் காயம் ஏற்பட்டால் உடல் பூராவும் எச்சரிக்கை செய்யப்பட்டு அக்காயம் குணப்படுவதற்கான சூழ்நிலைகள் ஏற்படுத்தப்படுகின்றனவாம்.

முனிச்சில் அண்மையில் 79 வது ஜெர்மன் சஸ்திர சிகிச்சை நிபுணர்களின் மாகாநாடு நடைபெற்றது. சுமார் 2000 நிபுணர்கள் இதில் கலந்து கொண்டனர். ஹாம்பர்க்கைச் சேர்ந்த பிரபல உடற்கூறு ரஸாயன நிபுணர் டாக்டர் குஸ்னு வெளியிட்ட சில தகவல்கள் இந் நிபுணர்களைக்கூட ஆச்சரியத்தில் ஆழ்த்தி விட்டது.

ரணக்காயங்கள் ஏற்பட்டால் அவை எப்படிக் குணமாகின்றன என்பதைப்பற்றி இவர் கண்டுபிடித்து வெளிப்படுத்திய விஷயங்கள் இதுவரை தெரிய வராத விஷயங்களாகவும் இருந்தன. உடலைப் பாதுகாக்கவும், ஏற்பட்ட காயங்களை ஆறச் செய்யவும் இயற்கையாக வேயுள்ள இந்த ஏற்பாடுகள் மட்டும் செய்யப்படாமலிருந்தால் இவ்வளவு பல் ஆயிர ஆண்டு காலமாக மனித குலம் நீடித்து வந்திருக்க முடியாது.

டாக்டர் குஸ்னு கூறியதாவது: உடலில் ஒரு காயம் ஏற்பட்டவுடன் அது ஆறுவதற்கான ஏற்பாடுகளும் உடனடியாக ஆரம்பமாகி விடுகின்றன. தசைகளின் வளர்ச்சிக்காக உதவும் பொருள்கள் காயமடைந்த இடத்தில் மறைய ஆரம்பித்து அதற்குப் பதிலாக ரணம் ஆறுவதற்கான திரவம் மற்றும் இதரப்பொருள்கள் அந்தஇடத்திற்குகிடைக்கப்பெறுகின்றன. ஒவ்வொரு நாளைக்காலும் வளரும் குணத்தைக் கொண்டிருக்கிறது. ஒன்று இரண்டாகப் பிரிந்தாலும் இரு பிரிவுகளும் தனித்தனியே வளரும் சக்தியைக் கொண்டிருக்கும். காயமடைந்த இடங்களில் எவ்வித தடங்கலுமின்றி இவை வளரும். நாளடைவில் காயமடைந்த இடத்திலுள்ள தசைகளின் இடத்தில் இவை உற்பத்தியாகி காயத்தைக் குணப்படுத்தும். காயங்களில் பாக்டீரியா அமைந்து கொப்பளிப்பது குணமாவதற்கான சூழ்நிலையை உண்டாக்குகிறது.

காயத்தைக் குணப்படுத்துவதில் முக்கிய பங்கைச் செய்வது ரத்தம் தான். இந்த நாளங்கள், குணமாவதற்கான பொருள்கள், இவை களைக் காயம்பட்ட இடத்திற்கு ரத்தமே கொண்டு செல்லுகிறது. ரத்தத்திலுள்ளபுரதசத்துக்கள், தசைகள், நாளங்கள் வளருவதற்கான உதவியையும்செய்கின்றன. விடுகள் கட்... கள் தேவைப்படு... ரத்தத்திலுள்ள இந்தப்புரத கார்ப்பளில்கள் புது தசைகளை உண்டாக்க மிகவும் உதவுகிறது.

ஏற்பட்டுள்ள ரணம் ஆறுவதற்கு இன்னும் விவரிக்க முடியாத அளவுக்கு சிக்கலுள்ள சில மாறுதல்கள் உடம்பில் ஏற்படுகின்றன. காயம் ஏற்பட்ட உடனேயே அது குணமாவதற்கான செயல்களும் உடலில் ஆரம்பித்து விடுகின்றன. ஒரு ஆபத்து அல்லது விபத்து ஏறபட்டால் நிவாரண உதவிக்காக எப்படி உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறதோ அதேமாதிரியான ஏற்பாடுகள் உடலில் ஏற்படுகின்றன. காயம் ஏற்பட்ட இடத்திற்கு வெகு தூரத்திலுள்ள இடத்திலும் கூட காயம் குணமாவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. உடம்பு முழுவதுமே 'எச்சரிக்கை' செய்யப்பட்டு காயம் ஏற்பட்ட இடம் ஆறுவதற்கான ஏற்பாடுகள் தானுகவே ஆரம்பிக்கப்பட்டு விடுகின்றன. ஒரு சிறு காயம் ஏற்பட்டால் கூட அது உடம்பு முழுவதையும் பாதிக்கும் என்ற உண்மையை நிரூபிக்க இந்தக் கண்டு பிடிப்பு பெரிதும் உதவுகிறது.

ஒரு அளவுக்கு மேற்பட்டு இந்த நாளங்கள் தசைகள் வளருமாஞல் அவைகள் 'ட்யூமர்' எனப்படும் கட்டிகளாக மாறி, தொல்லை கொடுக்கும். ஆகவே இந்த வளர்ச்சிகளும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். ஓரளவு வளர்ச்சியினுல் மட்டுமே ... மேற்கொண்டு ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஏஜண்டுகள் தேவை

| | |
|---|---|
| மாகோ | நெருங்கேணி |
| தெல்தெனிய | முள்ளியவளை |
| நயினு தீவு | பசறை |
| மாத்தறை | வயிளங் குளம் |

நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
நிர்வாகி,
"சுதந்திரன்"
த. பெ. இல. 1183
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு-12.

பாகப்படி மூலித் திராவகங்களால் தயாரிக்கப்பட்டது
மெவிக்கார் பாம்
இது தலையிடி, தேள்கடி, வாதம், பல்வலி, இருமல், ஜலதோஷம், வெட்டுக்காயம் முதலிய வியாதிகளை நொடிப்பொழுதில் நீக்கி, சுய நிலையை அடையச் செய்யும்.
ஒருமுறை உபயோகித்து உண்மை அறியுங்கள்.
எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.
உங்கள் வீடுகளில் அவசியம் இருக்க வேண்டியது.
உடன் வெட்டுக் காயங்களுக்கு கை கண்ட தைலம்
விலை போத்தல் ஒன்று ரூ. 1-25 சதம்
பிற ஊர்களில் ஏஜண்டுகள் தேவை.
கவி செம்ஸ்,
19, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1962 ஜூலை மாதம் 15-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 [illegible]


## தீண்டாமைக்குச் சாவுமணி

தீண்டாமை தமிழ் பேசும் இனத்தின் சாபக்கேடு, முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை, ஒற்றுமையின் வைரி. சமுகத்தை அரித்துத் தின்னும் விஷப்பூண்டு. சமுதாயத்தில் புரையோடிய அழுகிய புண். அது அகற்றப்படவேண்டும். இன்றேல் தமிழ் பேசும் இனம் சின்னாபின்னமாகிவிடும், ஐக்கியம் குலைந்துவிடும், ஆயிரம் பிளவுகள் தோன்றும், பிரிவினைச் சக்திகள் வளரும்.

இந்நாட்டில் தமிழ் பேசும் இனமே ஒரு சிறுபான்மை. அச் சிறுபான்மைக்குள் மற்றுமொரு சிறுபான்மையா? எண்ணிக்கையைப் பொறுத்ததே வலிமை, சாதியின் பெயரால் இனம் இரு கூறானால் எண்ணிக்கை குறையும், எண்ணிக்கை குறைந்தால் வலிமையும் குறையும். இதனால் பயன் பெறுபவர்கள் பெரும்பான்மையோர் தான்.

தமிழர்கள் ஒரு சாரார் மற்றொரு சாராரை அடக்கி வைத்திருக்கின்றனர். அதைப் பார்த்து சிங்களவர்கள் தமிழினத்தையே அடக்க வருகின்றனர்.

'உங்களுக்குள் ஆயிரம் சாதிகள், கோஷ்டிப் பிரிவினைகள்—உங்கள் சகோதரர்களின் உரிமைகளையே பறித்து விட்டு, எங்களிடம் உரிமை கோர உங்களுக்கு ஏது யோக்கியதை?' என்று ஏளனம் செய்கின்றனர் பெரும்பான்மைச் சிங்களவர்கள். இந்த இழிநிலைக்குத் தமிழினத்தைத் தள்ளியது தீண்டாமையன்றோ!

உரிமைகளைப்பெற நாம் ஒன்றுபடுவோம், சாதிவேற்றுமைகளைச் சாடுவோம், ஒரே அணியில் திரண்டு நின்று, நாமெல்லோரும் ஓர் இனம் எல்லோரும் தமிழர்கள் என்று முழங்குவோம், "சிறுபான்மை"த் தமிழர்களுக்கு சகல உரிமைகளும் வழங்குவோம்' என ஒவ்வொரு தமிழ் மகனும் இன்றே சபதம் செய்துகொள்ள வேண்டும்.

தீண்டாமை என்பது சமுதாயச் சீர்திருத்தம்—ஒரு சமூகப் பிரச்சினை என்பது உண்மையே. ஆனால் அது இன்று ஓர் அரசியற் பிரச்சினையும் கூட.

தீண்டாமை ஒழிப்பு இந்திய அரசியற் பிரச்சினையின் ஒரு பகுதி கதர் இயக்கம் போல அதுவும் இந்திய சுதந்திரப் போரின் ஓர் அம்சம், என்பது அன்று காந்தி மகான் கொண்டிருந்த கருத்து.

சேரிச் சீர்திருத்தம், சமபந்திபோசனம், ஆலயப் பிரவேசம், உணவு விடுதிகளைத் திறந்து விடுதல், கல்வியில் சமத்துவம்—என்றெல்லாம் பாரத நாட்டிலே பொங்கியது தீண்டாமை ஒழிப்பு இயக்கம். அஃது ஒரு சமூகச் சீர்திருத்தப் புரட்சியாகவே உருவெடுத்தது.

"தாழ்த்தப்பட்டோர்" என்பது இழிவு படுத்தும் பதம்; அவர்களும் ஆண்டவனின் மக்கள். எனவே அவர்களை "அரிசனம்" என்றழைத்தார் காந்தியடிகள். அவரது வாழ்க்கை இலட்சியங்களில் தீண்டாமை ஒழிப்பும் ஒன்று.

அதே நிலைதான் இங்கும். கீழ்ச்சாதி என்ற பெயரால் ஒரு சாராரை ஒதுக்கி வைத்துள்ளனர். இந்த ஒதுக்கல் தமிழ் பேசுவோரின் உரிமைப் போருக்கு ஒரு முட்டுக்கட்டை. இக் காரணத்தால் தீண்டாமை ஒழிப்பு இயக்கம் உரிமைப் போரின் ஓர் அம்சமாகிவிட்டது.

மனிதன், மனிதனுக வாழத் தெரியாத காலத்தில் தோன்றியதுதான் சாதிப் பிரிவினை. அது மனிதனின் சிருஷ்டியே. எனவே அது அநாகரிக காலத்தைச் சேர்ந்த ஒரு துருப்பிடித்த கோட்பாடு. விஞ்ஞான யுகத்துக்கு அது எவ்வகையிலும் ஒவ்வாது.

பகுத்தறிவுள்ள இளைஞர் கூட்டம் இத்துறையில் பெரும் பணியாற்றலாம். தீண்டாமையின் கொடுமையை உணர்ந்தால் மட்டும் போதாது. செயலாற்றத் துணிவும் வேண்டும். சாதிக்கட்டுப்பாட்டுக்குள் அடங்கி அவர்கள் கோழைகளாகிவிடக் கூடாது.

வட பகுதியில் பல முக்கியமான பெரிய கோயில்கள் ஏற்கனவே திறந்து வைக்கப்பட்டுவிட்டன. இன்னும் சில கோயில்கள் அரிசனங்களுக்கு திறபடாமல் இருப்பது வருந்தத்தக்கது. இக் கோயில்களின் கதவுகளையும் திறந்து எல்லோரும் பேதமின்றி ஆண்டவனை வழிபட வழி வகுக்க வேண்டும்.

சமத்துவத்தை நிலைநாட்ட சமபந்திபோசனம் தேவை. கோப்பாய்க் கோமான் அமரர் திரு. வன்னியசிங்கம் இதில் முன்னணியில் நின்றார். அவர் வகுத்த வழியே சென்று, அனைவருக்கும் சமத்துவம் வழங்குவோம்.

பல தேனீர்க்கடைகள், உணவு விடுதிகளின் அதிபர்கள் தாங்களாகவே முன்வந்து அரிசனங்களை தங்கள் விடுதிகளுக்குள் அனுமதித்துவிட்டனர். ஏனைய அதிபர்களும் இம் முறையைப் பின்பற்றுவது நல்ல பலனளிக்கும். பொதுக் கிணறுகளில் தீண்டாமை தலை காட்டுவது நன்றல்ல. சற்று விரிந்த மனப்பான்மையுடன் நடந்து அரிசனங்களை கிணறுகளைப் பாவிப்பதற்கான ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும்.

பாரதத்திலே லட்சோப லட்சம் அரிசன மக்கள் பௌத்த சமயத்தைத் தழுவினர். அவர்களின் தலைவர் டாக்டர் அம்பேத்கார் காட்டிய வழிஅது. சாதிக் கொடுமைகளிலிருந்து விடுபட மதம் மாற்றம் அவசியமென்று அவர் நினைத்தார்.

தீண்டாமையும் வேண்டாம்—மதமாற்றமும் வேண்டாம்.

தீண்டாமை நம்மினத்தின் மத்தியில் சிக்கியிருக்கும் ஒரு சமூகப் பிரச்சினை. இதனால் இதுவரை ஏற்பட்டு வந்த துன்பங்களைக் களைய வேண்டியது நமது பொறுப்பு. தீர்க்கவே முடிவுகட்ட வேண்டிய பிரச்சினை இது. நம் இனத்தை நசுக்க முனையும் பெரும்பான்மை வகுப்பினர், நம்மிடம் உள்ள தீண்டாமைப் பிரச்சினைக்கு முடிவுகட்ட, எதிரிகளையும், எத்தர்களையும் துணைகொண்டு சட்டங்களை வகுக்கலாம். அப்படியான ஒரு நிலை ஏற்பட்டால், பல சங்கடங்கள் உருவாகி, ஏற்கனவே சிறுபான்மையாக இருந்துவரும் [illegible] உருவாகி [illegible] [illegible].

நமது சமூகப் பிரச்சினையை நாமே தீர்க்க வழி வகுப்போமாக.

# மூதூர் மக்களை அவமதிக்கும் திரு. சுந்தரலிங்கத்தின் அறிக்கை

## லஞ்சக் குற்றம் உண்மையானல் நீதிமன்றம் செல்லத் தயங்குவதேன்?

மூதூர் மக்கள் கொடுத்த அடியால் ஆத்திரப்பட்டு அவர்கள் மீதே சீறிப்பாய்கிறார் திரு. சுந்தரலிங்கம் தோல்வியென்றால் சாதாரண தோல்வியா? கட்டுப் பணத்தை இழந்து ஓடவேண்டிய தோல்வியல்லவா? தன்மானமிருந்தால் தமிழரசுக் கட்சியை எதிர்த்துப் போட்டியிட இனி கனவிலும் கூட கருதாத அளவுக்கு மூதூர் மக்கள் அவருக்குப் பாடம் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. சுந்தரலிங்கம் போன்ற ஒருவர் தோல்வியைப் பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றே மக்கள் எதிர்பார்ப்பர். அத்தகைய பெருந்தன்மையோ கண்ணியமோ அவரிடம் பூஜ்யம் என்பதை தோல்விக்குப் பின் அவர் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையொன்று தெளிவாகக் காட்டுகிறது.

### மக்களை அவமதித்தார்

திரு. சுந்தரலிங்கம் மூதூரில் படுதோல்வி கண்டதும் பகுத்தறிவை இழந்தார். ஆத்திரப்பட்டார். பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டு தன் ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்தார்.

"வவுனியா—முல்லைத் தீவு வாக்காளர்கள் "சல்லி, சேலை, கசிப்பு" முதலியவைகளுக்கு ஆசைப்பட்டு என்னைத் தோற்கடித்தனர். மூதூர் மக்களும் "சல்லி, சேலை, கசிப்பு"க்கு மயங்கி என்னைத் தோற்கடித்தனர்" என்கிறார். திரு. சுந்தரலிங்கம் அவருக்குக் கிடைத்த தோல்விகளுக்கெல்லாம் சல்லியும், சேலையும், கசிப்பும் தான் காரணமா? வவுனியா பாராளுமன்றத் தேர்தலில் அவர் மண்கவ்விய தற்கும் இது தான் காரணமா?

தனக்கு வாக்களிக்காததற்காக மூதூர் மக்களையும், வவுனியா முல்லைத்தீவு மக்களையும் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்துப் பகிரங்கமாக அவமதித்துள்ளார்.

மூதூர் வாக்காளர் சுமார் 34,000 பேர்களில் அவருக்கு வாக்களித்த 423 பேர்களைத் தவிர எஞ்சிய 33,577 பேர்களும் சல்லி, சேலை, கசிப்பு, லஞ்சம் பெற்றவர்களா?

பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டாமா? பொது மக்களை இம்மாதிரியா பொதுப்படையாக அவமதிப்பது? சந்தர்ப்பம் கிட்டும் போது அந்த மக்கள் அவருக்குத் தகுந்த பதிலளிப்பார்களென்பதில் சந்தேகமில்லை.

அரசியற் செல்வாக்கு அஸ்தமித்து செல்லாக் காசான பிறகு தேர்தலில் நின்றால் படுதோல்விதானே கிடைக்கும். கைப்புண்ணுக்குக் கண்ணாடியா வேண்டும்? தோல்வியால் ஏற்பட்ட ஆத்திரத்தைத் தீர்க்க பொதுமக்கள்தான் கிடைத்தார்களா?

திரு. சுந்தரலிங்கம் லஞ்சக் குற்றம்சாட்டுகிறாரே, லஞ்சம் கொடுத்தல் ஒரு தேர்தல் குற்றம் என்பது திரு. சுந்தரலிங்கத்துக்குத் தெரியாமலிருக்க முடியாது. அக்குற்றத்திற்குத் தண்டனை பாராளுமன்ற ஸ்தானத்தை இழப்பதோடு 7 வருடங்களுக்கு வாக்குரிமையும் பறிக்கப்படுமென்பதும் அவருக்குத் தெரியும்.

சல்லி, சேலை, கசிப்பு லஞ்சம் கொடுத்து மாற்றுக் கட்சியினர் வாக்குகளைப் பெற்றிருந்தால், அது தேர்தல் குற்றம்—அதற்குப் பரிகாரம் தேட நீதிமன்றம் இருக்கிறதே! உயர்நீதி மன்றத்தில் தேர்தல் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டியது தானே! அது நேர்மையான சுலபமான வழி என்பது திரு. சுந்தரலிங்கத்துக்குத் தெரியும்.

அதை விடுத்து பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்து பகிரங்கமாக மக்கள் மீது லஞ்சக் குற்றச்சாட்டைச் சுமத்துவது மகா கேவல

சுதந்திரன் அரசியல் விமர்சகர்

மான செயலாகும். அது கோழைத் தனமும் கூட.

### இன்னும் காலம் கடந்து விடவில்லை

வவுனியாத் தேர்தலைப் பொறுத்த வரையில் தேர்தல் வழக்குத் தொடர காலம் கடந்து விட்டது. ஆனால் மூதூர் தேர்தல் சம்பந்தமாக தேர்தல் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டுமானால் இன்னும் அவகாசமிருக்கிறது.

திரு. சுந்தரலிங்கம் கூறுவதைப் போல லஞ்சக் குற்றச் சாட்டு உண்மையானல் உடனடியாக வழக்குத் தாக்கல் செய்வதே நேர்மையாகும். திரு. சுந்தரலிங்கம் போன்றோர் நேர்மையான வழியைக் கடைப்பிடித்து கண்ணியத்தைப் பாதுகாத்துக் கொள்வதே சிறப்பு. 423 வாக்குகளைப் பெற்று, கட்டுப் பணத்தையும் பறி கொடுத்துவிட்டு, கடைசியில் வாக்காளர்கள் மீது அபாண்டம் சுமத்துவது எவ்வகையிலும் அவருக்கு மதிப்பளிக்கும் செயலன்று.

ஒரு காலத்தில் காசும், துணியும், மது பானமும் கொடுத்து வாக்குகளை வேட்டையாட முடிந்தது தென்பது உண்மையே. அந்தக் காலம் மலை ஏறிவிட்டது.

லஞ்சலாவண்யங்களுக்கு ஏமாந்து வாக்களிப்பவர்கள் அல்ல இப்போதுள்ள வாக்காளர்கள்.

லஞ்சம் வாங்கிக்கொண்டு, லஞ்சம் கொடுத்தவர்களுக்கு எதிராகவே வாக்களித்து விடுபவர்கள் தான் தற்போதைய வாக்காளர்கள். ஆகையால் தான் இப்போதெல்லாம் வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுப்பதற்கே பயப்படுகிறார்கள்.

இதனைத் திரு. சுந்தரலிங்கம் இன்னும் உணராதிருப்பது விந்தையே!

### 10 ஆண்டு 3 ஆண்டாக சுருங்கியது

இவ்வாரம் கவர்னர்—ஜெனரல் தனது சிம்மாசனப் பிரசங்கத்திலே பிரமாதமாக எதையோ கூறிவிடப் போகிறார் என்று மக்கள் எதிர்பார்க்கவில்லை. எனவே அவர்கள் ஏமாந்து போகவுமில்லை. சிம்மாசனப் பிரசங்கத்தில் அடங்கிய விடயங்கள் ஏறத்தாழ அனைத்தும் அன்று (11-7-62) காலையிலே "தவஸ" என்னும் தினசரியில் வெளி வந்திருந்ததால், பிரசங்கத்தின் சாரம் ஏற்கனவே மக்களுக்கு தெரிந்து விட்டது.

அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றி பழைய கதை திரும்பப் படிக்கப்பட்டுள்ளது. 10 வருடத் திட்டம் 3 வருடத் திட்டமாக சுருங்கிவிட்டது என்பது கடந்த மூன்று வாரங்களாகப் பத்திரிகைகளில் அடிபட்ட விஷயம்தான்.

10 வருடத் திட்டத்துக்கு ஏற்பட்ட கதி மூன்று வருடத் திட்டத்துக்கும் ஏற்படக் கூடாது. அல்லது அடுத்த வருடத்தில் அது மேலும் சுருங்கி மூன்று மாதத் திட்டமாக உருமாறிவிடக் கூடாதே என்ற கவலைதான் ஏற்படுகிறது.

10 வருடத் திட்டத்தைப் போன்று புதிய மூன்று வருடத் திட்டம், திட்டச் சபையினலோ, ஒரு திட்டக் கமிட்டியாலோ நன்கு ஆராயப்பட்டு அமைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. திறைசேரியிலுள்ள சில அதிகாரிகளின் சிருஷ்டிதானும் அது.

இம்மாதிரி யெல்லாம் திட்டமிட்டு நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்க முடியுமென்றால் அது ஒரு விந்தையாகவே இருக்கும். திட்டம் வெளி வரும்வரை காத்திருப்போம் அதன் உண்மைக் கவர்ச்சியைத் தெரிந்து கொள்ள.

## மொழிப்பிரச்னை கப்சிப்: இனி நம்கையில்தான் தீர்வு

தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பொறுத்த வரையில் ஒரு சொல்கூட சிம்மாசனப் பிரசங்கத்தில் கிடையாது. மொழிப் பிரச்சினையைத் தீர்ந்து போன விஷயமாக அரசாங்கம் கருதியிருக்கிறது போலும்!

தமிழ் மொழியை நசுக்கி வைத்திருப்பது முடிந்து போன இறுதியான நடவடிக்கை என்பது அரசாங்கத்தின் முடிவு. அதுதான் கவர்னர்—ஜெனரல் அப்பிரச்சினையைக் குறித்து மௌனம் சாதித்ததிலிருந்து புலனாகிறது.

அரசாங்க அலுவல்களிலும், நீதி மன்றங்களிலும் சிங்களத்தைத் தீவிரமாக அமுல் நடத்தப் போகிறார்களென சிம்மாசனப் பிரசங்கம் கூறுகிறது. இதுதான் மொழிப் பிரச்சினையைத் தீர்க்கும் வழியா?

சிங்களத்தை தீவிரமாக அமுல் நடத்தப் போவதாகக் கூறுபவர்கள் தமிழன் நிலையைபற்றி ஒரு வார்த்தைகூட கூறவில்லையே!

ஆட்சியாளர் மொழிப் பிரச்சினையை மறந்தாலும்,

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'பாசி படிந்த மட்டக்களப்பு வாவியிலே மீன் பாடக் கேட்டேன்' என்று பாடினார் விபுலாநந்தர். அவ்வாவியிலே நீரர மகளிர் வாழ்ந்தனரென்ற கற்பனையின் பின்னணியில் தான் வித்தகரின் 'யாழ் நூல்' பிறந்தது. அவருடைய கற்பனையின் பின்னணியில்,

இதோ, இங்கு,

ஒரேயொரு கதை.

பூவுலகம் மாத்திரமல்ல; தேவுலகமும் கண்டு அஞ்சும் ஆண்மை படைத்தவன், ஆற்றல் மிகுந்தவன் இராவணேஸ்வரன். இலங்கையின் வேந்தன்; கைக்கிளையின் தந்தை.

கைக்கிளை அழகு சொட்டும் இளங்கன்னி. இளமருதன் என்ற இளங் கவிஞனின் இன்னிசையில் மயங்கி வீழ்ந்தவள், அவனை அன்புப் பிணைப்பினால் கட்டி விட்டாள்.

இக் காதலைக் கண்ணுற்ற இராவணன் சீறினான்.

காதலிப்பதும் குற்றமா? அதுவும் மறத்தமிழ் வேந்தன் இராவணனது நாட்டிலா?

கைக்கிளை திகைத்தாள்.

"மகளே கைக்கிளை! விளையாட்டே வினையாயிற்றே அம்மா!" தேம்பித் தேம்பியழுதான் இராவணேசன். அவன் மார்பிலே முகம் புதைத்து விசும்பினாள் கைக்கிளைக் கன்னி. அவளது கேசத்தை அன்போடு வருடிக் கொண்டிருந்தன இலங்கை வேந்தனது விரல்கள்.

"அப்பா!" அவள் அண்ணாந்து அவன் கண்களைப் பார்த்தாள். இராவணேஸ்வரன் என்றால் அனைத்துலகுமா? தேவருலகே நடுநடுங்குமே! கண்ணீர் சிந்தியேயறியாத—வெற்றிப் பெருமையோடு என்றுமே யொலிக்கும் அந்தக் கண்கள்! ஐயோ இந்தப் பேதைக் காகவா குளமாகி வழிகின்றன? அப்பா! என்றழைத்தவளால் அதற்குமேல் எதுவும் பேசவே முடியவில்லை. இதயப்பாறை அத்தனையும் மெழுகாகி உருகி ஓடி தொண்டைவரை வந்து இறுகி அடைத்துக் கொண்டது போன்று விம்மத்தான் முடிந்தது. அவள் விம்மி விம்மியழுதாள். வேந்தன் அவள் விழிநீரைத் தன் உத்தரியத்தால் துடைத்து விட்டவாறே பெருமூச் செறிந்தான்.

கைப்பிடித்த வாள்கள் நிலத்திலேவீழ, வீரர்கள் அப்படியே திகைத்துப்போய் நின்றிருந்தார்கள். கைக்கிளையின் அன்னையர் கல்லாய்—சிலையாய்—மரமாய்— சமைந்திருந்தார்கள். ஏன் காதல் கவிஞன் இளமருதன் கூட துண்டுதுண்டாக வெட்டுண்டு நிலத்திலே கிடந்த வடத்தை நோக்கியவாறு மெய்மறந்தே நின்றிருந்தான்.

இப்படி எல்லோரும் மரமாய்விட—கண் கலங்கியே யறியாத ஈழவேந்தன் கண்ணீர் உகுத்த அங்கு என்ன தான் நடந்து விட்டது? 'கைக்கிளை நீயாவது சொல்ல மாட்டாயா?' என நாம் அங்கலாய்க்கிறோம். கைக்கிளை சொல்லமாட்டாள். அவள் கன்னி. விம்மி விம்மி உள்ளம் வெடிப்பதைவிட அவளால் எதுவுமே செய்ய முடியாது—எதுவுமே பேச முடியாது. இராவணேசனின் உத்தரியத்தையே தெப்பமாக்கிவிட்ட அவள் கண்ணீரைக் கேட்போம். அது சொல்லும்—ஒன்றா? இரண்டா? ஓராயிரம் கதைகள்.

ஐயோ! ஐயோ! ஓராயிரம் கதைகள் எங்களுக்கு வேண்டாம். ஒரேயொரு கதை; எங்கள் உள்ளம் எதற்காக அங்கலாய்க்கிறதோ— எதை அறியத் துடியாய்த் துடிக்கிறதோ; அதே கதை அந்த ஒரேயொரு கதை.

போதுமா?

போதும்.

(2)

அன்று ஒரு பௌர்ணமி தினம். மேற்கு வானிலே செம்பஞ்சுக் குழம்பைத் தோய்த்து நீலப் படாத்தின் மீது ஓவியம் தீட்டிக் கொண்டிருந்தான் செங்கதிரோன். அந்த வர்ணக் கலவை சிந்தியதால் மேலைக் கடலே போர்க்களத்து எழுந்த குருதி வெள்ளம் போன்று பொங்கிக் கிடந்தது.

கீழ்வானில் கிண்ணத்து நிறைந்த பால்வட்டம் போன்று தண்ணென்ற புன்னகை சிந்திப் பவனி வந்தாள் சந்திரிகை. அவள் தன் காதற் கதிரவன் தீட்டும் ஓவியம் நோக்கிக் கைகொட்டிச் சிரிப்பது போன்று குதூகலித்தாள். அவள் வரவு கண்டு—அவள் மெல்லடிக்கு வெண் பஞ்சு நிறைப்பது போன்று கடல் என்னும் காரிகை தன் கையென்னும் அலை கொண்டு நுரையென்னும் பஞ்சள்ளிக் குவித்தாள்.

பவளப் பொய்கையின் ஓரமாக; இந்த அற்புதத்தை அள்ளி ரசித்தவாறே நின்றிருந்தாள் கைக்கிளைக் கன்னி.

இளமருதனும் அன்றைக்கென்றே அந்தப் பொய்கையோரம் வரவேண்டுமா? வந்தால் போதாதா அந்தக் காதற் கதிரவனையும் சந்திரிகைக் கன்னியையும் வைத்தா கவிதை புனைய வேண்டும்? புனைந்தாற்றான் போதாதா? அதை அங்கு நின்றவாறே பாடவும் வேண்டுமா?

அந்த இசை அவளைக் கட்டிப் போட்டது. அவள் ஓடினாள். இசை கேட்ட திசை நோக்கி ஓடினாள். அந்த இசை பட்டென்று நின்றது. அவள் தொப்பென்று வீழ்ந்தாள். தன்னுணர்வை அவள் பெற்றபோது இன்பக் கரமிரண்டு தன் தோள்பற்றித் தூக்குவதையுணர்ந்தாள். அவள் முகமும் அந்தப் பரந்த மார்பும் இணைந்தன.

"கைக்கிளை!"

அவள் அரவிந்த விழிகள் மயக்கும் மையல் நிலையோடு மெல்ல விரிந்தன.

"நீதானா?...... நீ ஏன் இப்படி ஓடிவந்து என் காலடியில் விழவேண்டும்?"

"நானா? நீங்கள் இழுத்து வரவில்லையா?"

"கைக்கிளை! விளையாடுகிறாயா?"

"ஆ; நான் விழவில்லை; உங்கள் இசை விழுத்தியது. உங்கள் கரங்கள் தஞ்சமளித்தன. உங்கள் மார்பைவிட்டு இந்த முகம் எப்போதுமே அகலாது."

அவன் கண்களை மூடித் தனக்குள்ளே லயித்தான். அவள் இன்பக் கரங்கள் அவன் கழுத்தைக் கட்டின. முகம் மீண்டும் மார்பிலே பதிந்தது.



"கைக்கிளை!" அவன் அவள் முகத்தை நிமிர்த்தினான்.

"உன்னை நீ அறியவில்லை? ஈழவேந்தன் தவமிருந்து குறுமுனியின் உதவியோடு ஈசனிடம் பெற்ற ஏழிசை மகளிரில் ஒருத்தி நீ. நான் வெறும் மானுடன். அதுவும் ஏழைக் கவிஞன்!"

"ஆ! என்ன சொன்னீர்கள்? வெறும் ஏழைக் கவிஞனா?........... இராவணேசனின் தமிழ் மன்றத்து முதற் புலவனாயிருக்கும் போது ஏன் ஏழையென்கிறீர்கள்?"

"புலவன் எப்போதும் ஏழைதான் கைக்கிளை. அவன் ஏழையாயிருந்தாற்றான், கலாவல்லி இரங்கி அள்ளியள்ளித் தருவாள்......"

"அப்படியானால் அந்த ஏழைக்கு அடிமை இந்தக் கைக்கிளை. சரிதானே அத்தான்!"

"கைக்கிளை!......"

ஆம்; கண்வழிக் கருத்தொன்றியது. அவர்களால் காற்றிலே ஏறி இவ்விண்ணையும் சாடமுடியும். தம்மை மறந்தே நின்றுவிட்டார்கள்.

"கைக்கிளை!" யார்? அழைத்தது விளரியன்னைதான்!

"அத்தான்! அன்னையழைக்கிறாள்."

"ஓ, இதோ பாடல்; இசையமைக்கும்படி நான் தந்ததாகச் சொல்லிக் கொடு..."

"அதுதான் சரி......"

கைக்கிளை பாடலை வாங்கிக்கொண்டே அன்னையிடம் ஓடினாள். அவள் துள்ளியோடும் பின்னழகை நின்றபடியே ரசித்து விட்டுத் திரும்பினான் இளமருதன். அவன் நான்கு பாகம் நடப்பதற்கிடையிலே ஒரு மலர்க் கரம் அவன் தோள்பற்றியிழுத்தது. இளமருதன் திகைத்துத் திரும்பினான். கைக்கிளைதான். பருக்கை மணல் நெடுக அவனை இழுத்துக் கொண்டே ஓடினாள்.

வேளைவருமென்று அவர்கள் காத்திருக்கவில்லை. விடிநிலவில் கண்டுண்டார். வெறிபடைத்தார். தாழை மலர்ச் சோலையெல்லாம்-கற்பகத் தேன் தருக்களிடை விளையாடித் தவழ்ந்து வந்தார்.

(3)

கைக்கிளை திரும்பி இல்லம் சேர்ந்தபோது சந்திரிகை உச்சிக்கு மேலேயிருந்து சிரித்துக்கொண்டிருந்தாள். அவளைக் கண்டவுடன் அன்னையர் முகத்தைத் திருப்பிக்கொண்டனர். விளரியன்னை கூட அவளை நிமிர்ந்து பார்க்கவில்லை. கைக்கிளைக்கு அழுகை பொத்துக்கொண்டு வந்தது. அப்படி என்ன தான் குற்றமிழைத்துவிட்டாள் அவள்? காதலித்தது குற்றமா? காதலனோடு இன்புற்றிருப்பது குற்றமா?

அவளுக்குத் தாங்க முடியவில்லை. அழுதுகொண்டே விளரியன்னையின் காலடியில் வீழ்ந்தாள். விளரியன்னை தூக்கி மார்போடணைத்தபடியே கூறலானாள்.

"கைக்கிளை! அந்தியிலே மன்னன் வந்தான். நம் அறுவரைத்தான் கண்ணுற்று அதிர்ச்சியுற்றான், கொண்டுவந்த பேர்யாழைத் தூக்கிக் கோபமொடு குளத்தில் வீசிவிட்டுப் போய்விட்டான். இனி என்ன நடக்கப் போகிறதோ! பாவம்; அந்தக் கவிஞனுக்கும் தீராத இழுக்கம்மா!"

இழுக்கா? காதலிப்பது இழுக்கா? அதுவும் மறத்தமிழ் வேந்தன் இராவணனது நாட்டிலா? கைக்கிளையால் தாங்க முடியவில்லை.

"அம்மா! எமக்கும் ஒரு நீதியுள்ளது. எடுத்துச் சொல்வோம். இன்றுவரை காதலித்தல் குற்றமில்லை. இனிமேலே குற்றமெனில் எதிர்த்தே தீர்வோம்!" வீராவேசத்தோடு, ஒரு விதப் படபடப்போடு பொரிந்தாள் கைக்கிளை.

"எதிர்ப்பதுவா? கைக்கிளை! நீ என்ன சொன்னாய்? இராவணனை எதிர்ப்பவர்கள் உலகத்திலே—ஏன் தேவருலகிலே கூட இருந்ததில்லை." நெருப்பாக எரிந்து விழ்ந்தாள் விளரியன்னை. மகள் தானென்றாலும் மன்னனை எதிர்ப்பதாகக் கூறலாமா? அவளது சீற்றம் அடங்கு முதலே குதிரைகளின் குளம்பொலி கேட்டது. வீரர்கள் சூழ்ந்து இளமருதனையழைத்து வந்தார்கள். அடுத்த கணம் தூணோடு அவன் வரிந்து கட்டப்பட்டான்.

"நில் அங்கே!"

இளமருதனை நோக்கி, தன்னை மறந்தே தாவிச் சென்ற கைக்கிளை, குரல் கேட்டு நிமிர்ந்தாள்.

இராவணேசன் அவளைப் பார்த்துப் பெரிதாக நகைத்தான்.

"கள்ளி! காதலித்தாயா? பார் உன் காதலனை!" வீரர்களை நோக்கினான்.

"ம்; ஏன் நிற்கிறீர்கள்? நடக்கட்டும்" இராவணேசனின் கண்ணசைந்ததுதான் தாமதம் உருவிய வாள்களுடன் இளமருதனை நோக்கிப் பாய்ந்தார்கள் வீரர்கள்.

கைக்கிளை, தீயானாள்! உளம் வெடித்துப் பிளந்து எரிமலையாகியது: ஆழ்ந்த மரணத்தீயில் பட்ட சற்ப

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதி இரண்டொழிய வேறில்லை எனச் சாற்றிய இனத்தின் சாபக்கேடு

## சாதிப் பிரச்சினையின் மூல காரணமும் அதைத் தீர்க்க வழிவகையும்

## மக்களிடையே விழிப்புணர்ச்சி வேண்டும்

**நம் நாட்டிலுள்ள பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் நாள் எந்நாளோ அந்நாளே மனுக் குலத்தின் பொன்னுளாகும். மனிதனுடைய அடிப்படை உரிமைகளை அவன் அனுபவிப்பதற்குச் சமுதாயம் என்று அனுமதி வழங்குகின்றதோ அன்று உலகமெல்லாம் மகிழும் தினமாகும் எனல் மிகையாகாது. அத் தினம் வெகு சேய்மையிலன்று.**

வெகு அண்மையில் நெல்லியடி என்ற இடத்திலுள்ள தேநீர்க் கடைகளைத் தாழ்ந்த ஜாதியினர் என்போரால் அழைக்கப்படும் மக்களுக்குத் திறந்துவிடுவதற்காக உடுப்பிட்டிப் பாராளுமன்ற அங்கத்தவர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் சென்றபொழுது "உயர் ஜாதியினர்" எனத் தங்களை அழைத்துக் கொள்ளும் கடைச் சொந்தக்காரர்கள் கடைகளை அடைத்து விட்டுக் கம்பி நீட்டிய செய்தியைத் தினசரி ஒன்றிற் கண்ணுற்றோம். அம் மகானுபாவர்களை எண்ணி அவர்களின் அறியாமைக்காக வருந்துவதா அன்றி நகைப்பதா என்பது சிந்தனைக்கு விருந்தாயமைந்துள்ளது.

திரு. சிவசிதம்பரம் அவர்களுக்குக் கிடைத்த பரிசு, அவரது மக தலைவர் பதவி ஒன்றிலிருந்து அன்னார் நீக்கப்பட்டதாகும். இருப்பினும் அம் மாவீரனின் உறுதி அவர் விடுத்துள்ள கூற்றிலே தொனிக்கின்றது. "தலைவர் பதவி பெண்ணை தலையேபோயினும் கொண்ட கொள்கையைக் கைவிடேன்" என்ற அவரின் ஆணித்தரமான அறிக்கை சாதி வெறிபிடித்தலையும் பித்தர்களுக்குக் கலக்கத்தை உண்டு பண்ணியிருப்பினும் எம்போன்றவர்கட்குப் புத்துணர்ச்சி அவ்வறிக்கையிலிருந்து பிறந்துள்ளது. முன்னேற்றப் பாதையை நோக்கி விறுநடை போடும் நம் இளைஞர்கட்கும் இக்கூற்றுத் தோன்றாத் துணையாயிருக்குமென்பதில் ஐயமில்லை.

### சாபக்கேட்டின் வரலாறு

நம் தமிழினத்திற்கே சாபக்கேடாகவுள்ள இச் சாதிப் பிரச்சினை தோற்றிய வரலாறு பற்றிச் சற்றுராய்தல் பொருத்தமுடைத்தெனக் கருதுவதால் அப்பணி மேற்கொள்கிறேன்.

கற்காலத்தில் மனிதன் மிருகங்களை வேட்டையாடி அவிலிருந்தே உணவு, உடை, மற்றைய தேவைகள் ஆகியவற்றைப் பெற்றுக் கொண்டான். காலம் செல்லச் செல்ல மனிதன் சிறிதளவு அறிவு பெற்று விளங்கினான். கற்களால் ஆயுதங்கள் செய்வதை விடுத்து உலோகங்களால் ஆயுதங்கள் செய்யும் நிலைமை எய்தினான் மானிடன். நாகரிகமும் அறிவும் வளர வளரத் தேவைகளும்

**செ. பிரான்சிஸ் சேவியர்**

அதிகரித்துக் கொண்டே வந்தன. ஒவ்வொருவரும் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. உதாரணமாகப் பத்துப் பேர்கள் உள்ள குழு ஒன்றில் எல்லோரும் வேட்டைக்குச் செல்ல முடியாது. ஒருவர் சமைக்க வேண்டும்; இன்னொருவர் ஆடைகளைத் தயார் பண்ண வேண்டும்; மற்றும் சிலர் வீட்டைப் பாதுகாக்க வேண்டும்; பிறரும் சிலர் பிள்ளைகளைப் பராமரிக்க வேண்டும்; மீட்டும் சிலர் நாலுவிதத் தொழில்களைப் புரிய வேண்டும்.

ஆகவே ஒவ்வொருவரும் தத்தமக்குக் கொடுக்கப்பட்ட தொழில்களைத் தினமும் கிரமமாகச் செய்து வரலாயினர். இவ்வாறு குறிப்பிட்ட தொழில்களில் ஒருசிலருக்குப் பரிச்சயம் ஏற்பட்டதும் அத்தொழில்களிலேயே அவர்கள் நிலைத்தனர். ஏனெனில் ஓர் குறிப்பிட்ட தொழிலில் அனுபவம் உள்ள ஒருவர் மற்றவர்களிலும் பார்க்க அத் தொழிலைத் திறமையாகச் செய்ய முடியுமல்லவா?

காலச் சக்கரம் இவ்வாறு சுழன்று கொண்டிருக்கையில் இவர்கட்கிடையே குரோதங்கள் ஏற்படலாயின. மற்றவர் மேல் மனஸ்தாபம் உண்டானதும் அவரவர் செய்த தொழிலைக் கொண்டே அவரவரை வைதனர். உதாரணமாக, வேளாண்மை சாகுபடி செய்வோரை வேளாளர் என்றும், மீன் பிடிப்போரை மீனவர் என்றும், பறை முழங்குவோரைப் பறையர் என்றும், இன்னும் அவ்வத் தொழில்கள் செய்பவர்களை அவ்வவ் நாமங்களாலே அழைக்கத் தொடங்கினர்.

பகை முற்றியதும் குழுக்களாகப் பிரிந்து வாழ்ந்தனர் யார் பக்கம் கூடிய பலம் இருந்ததோ அவர்கள் உயர் ஜாதியாயினர், யார்பக்கம் பலம்குறைந்திருந்ததோ அவர்கள் கீழ்ஜாதியினரென அழைக்கப்படலாயினர்.

### விஞ்ஞானயுகம் நினைவிருக்கட்டும்

இவ்வாறே ஜாதி பேதம் ஏற்பட்டதன்றி இயற்கை அன்னை ஜாதிகளை வகுத்துக் கொடுக்கவில்லை. இயற்கைத்தாய் அமைத்துக் கொடுத்த ஜாதி ஆண், பெண் என்ற இரு பாலரே. மிகுதி எல்லாம் மனிதன் [illegible]

இது இவ்வாறிருக்க உலக நாடுகளின் முன்னேற்றத்தைச் சற்று நோக்குவோம். நாம் வாழும் விஞ்ஞான நூற்றாண்டை எண்ணி யாராய்வோம். மண்ணுக்கும் விண்ணுக்கும் பாலம் அமைப்பதில் "நீ முந்தியா நான் முந்தியா" என இராட்சத வல்லரசுகள் போட்டி போட்டுக் கொண்டிருக்கும் வியப்புமிக்க காலத்திலே நாம் வாழ்கின்றோம். விண்வெளி வீரர்களின் தொகை அரை டஜன் ஆக அதிகரித்திருக்கும் "ஜெட்டுக்கட் ஆண்டிலே" நாம் வாழ்கின்றோம்.

கர்ப்பம் தரித்த மூன்று வாரத்திற்குள் பிறக்கப் போகும் சிசு ஆணு, பெண்ணு என முன்கூட்டியே அறிந்து சொல்லக் கூடிய இயந்திரம் இயங்கும் நல்ல நூற்றாண்டிலே நாம் வாழ்கின்றோம். சுருக்கமாகக் கூறப்புகின் வரலாறு கண்டிராத அற்புதங்கள் நாளாந்த சம்பவங்களாக நடந்தேறும் அதிசய யுகத்திலே நம் வாழ்வு கழிகின்றது.

### காரணம் என்ன?

உலக நாடுகள் எல்லாம் முன்னேற்றத்தின் உச்சப் படியை நோக்கி விரைந்தேறும் வேளை நமது தமிழ்ச் சமூகம் மட்டும் அடிமைகளாக அல்லற்படக் காரணம் என்ன?

"கற்க கசடறக் கற்க, கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற வள்ளுவன் வாக்கை அறிந்தும் அவ்வாறு நடவாமையினுல் என்பது ஓர் காரணம். தெள்ளு தமிழ் மொழியிலுள்ள பற்பல இலக்கியங்களைக் கற்ற பின்னும்கூடச் சாதிப் பித்தர்களாக நாம் வாழ்கின்றோமென்றால் நம் அறியாமையை என்னென்பது?

"சாதி இரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் இட்டார் பெரியோர் இடா
தோர் இழிகுலத்தோர் பட்டாங்கில் உள்ளபடி"

எனப் பாட்டி ஒளவை பல்லாண்டுகட்கு முன் பாடி மறைந்தாள்.

"சாதிகள் இல்லையடி பாப்பா குலந் தாழ்ச்சி உயர்ச்சி
சொல்லல் பாவம்"

எனப் பார் போற்ற முழங்கினுன் பாரதி.

### காந்தி மகான்

பாரத மாதாவின் அடிமைத் தளையை அறுத்தெறியச் சாத்வீகப் போராட்டம் புரிந்து வல்லமை மிக்க பிரித்தானிய சாம்ராஜ்யத்தையே அடிபணிய வைத்த அண்ணல் காந்தி, உலகம் போற்றும் சாந்த மூர்த்தி, தன் வாழ் நாள் முழுவதும் சாதி அரக்கனின் கோரப் பிடியிற் சிக்கித் தவிக்கும் மக்களை விடுவிக்க தம்மாலியன்றவரை அரும் பாடுபட்டுத் தம்முயிர் ஈந்தார்.

வேறு பல பெரியார்களும் காலத்திற்குக் காலம் தோன்றி இப் பிரச்சினைக்கு முடிவுகட்டி, சாதிப் பேயை விரட்ட முனைந்தனர் என்பது வெள்ளிடைமலை. இப் பெரியார்களின் போக்கில் தமக்கு நம்பிக்கை பிறக்காதது விந்தையாகவில்லை?

### காதலும் சாதியும்

காதல் மணங்களுக்குக் கூடச் சில சந்தர்ப்பங்களில் சாதி தடையாக உள்ளது. சாதி வேற்றுமையினுல் தங்கள் காதல் நிறைவேருமையினுல் வாழ்க்கையில் விரக்தியடைந்து தற்கொலை மூலம் தம்முயிரை மாய்த்துக் கொண்ட வாலைக் குமரிகளும் இளைஞர்களும் எண்ணிலடங்கார்.

"திருமணம் அவனவன் சொந்த விடயம். சாதி வேற்றுமை பார்த்தால் அறியாமை" என அறிவுரை கூறும் பலர் தம் கொள்கைகளை நடைமுறையிற் காட்டத் தயங்குகின்றனர். "அவன் கீழ் ஜாதியிலே மணம் புரிந்தவன், அவனுடன் சமனுகப் பந்தி அமரின் மற்றவர்கள் என்னைச் சபையிலே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள், ஆகையால் திருமணத்திற்குச் செல்லவில்லை" எனக் கூறும் சிலர் சீர்திருத்

(13-ம் பக்கம் பார்க்க)

## சங்கப் பலகை

**நூற்றுண்டுகளில் தமிழ்**
ஆசிரியர்:
கா. பொ. இரத்தினம்
வெளியீடு:
இன்ப நிலையம், மயிலாப்பூர், சென்னை - 14
விலை: ரூபாய் ஐந்து.

உலகம் கண்ட தொன்மை மொழிகளுள் தொன்மையாக விளங்குவது எமது தமிழ்மொழி. இன்ன காலத்தில் தோன்றியதென வரையறுக்க முடியாத இம் மொழியைச் சரித்திர வாயிலாகக் கற்பிக்க முயலுவது இலகுவான காரியமல்ல.

'நூற்றுண்டுகளில் தமிழ்' என்ற நூலில் அதன் ஆசிரியர் திரு. கா. பொ. இரத்தினம் அதைத் தான் செய்ய முயன்றிருக்கிருர். அன்னரின் தமிழறிவும், தமிழ்ப் பற்றும், தமிழார்வமும் அவருக்கு இம்முயற்சியில் உறுதுணையாக நின்று விளங்குகின்றன. ஆகவே, நூல் தன் நோக்கத்தில் தோற்கவில்லை.

தமிழ் மொழி பற்றிய சரித்திர, இலக்கிய ஆராய்ச்சி நூல்கள் இதுவரை பல வெளிவந்துள்ளன. ஆனல், தமிழ் மொழியின் சரித்திரத்தை நூற்றுண்டுகளாகப் பிரித்து எழுதியிருப்பது இது தான் முதல் தடவையாகுமெனவே எண்ணுகின்றோம்.

இப் புது முறையைக் கையாண்ட ஆசிரியர் பாராட்டுக்குரியவர். நூற்றுண்டுகளாகப் பிரித்துப் படிக்கும் முறை, வாசகரின் மனதில் தமிழ் மொழியின் படிப்படியான வளர்ச்சி பற்றி உறுதியான கருத்தை ஆழப் பதிய வைக்கும் முறை என்பதை இந்நூல் விளக்கி வைக்கிறது. கி. மு. ஐந்தாம் நூற்றுண்டுக்கு முன்னிருந்து இருபதாம் நூற்றுண்டுவரை தமிழ் மொழியின் வரலாற்றை வகுத்துக் கூறியுள்ள ஆசிரியர் இலகுவான நடையில், முக்கியமான புலவர்களுக்கும், படைப்புக்

(13-ம் பக்கம் பார்க்க)

**பெயர்: தமிழ் முரசு**
ஆசிரியர்: நவாலியூர் நடேசன்
வெளியீடு: வஸ்தியன் அச்சகம்
விலை: 30 சதம்.

இன்று ஈழத்தில் தமிழ் மொழிக்கு ஓர் மறு மலர்ச்சிக்காலம். இளம் எழுத்தாளர்கள் எழுத்துலகில் புகுந்து, தமது கருத்துக்களுக்கும், சிந்தனைகளுக்கும் ஆக்கம் கொடுக்க வேண்டும் என்ற உணர்ச்சியினுல் உந்தப்பட்டு, எழுதித்தள்ளும் காலம்.

இவ்வகையில் தான் 'தமிழ் முரசு' மாத சஞ்சிகையும் பிறந்திருக்கிறது. ஆர்வம்கொண்ட இளம் எழுத்தாளர்கள் இச் சஞ்சிகையை ஆரம்பித்துள்ளனர்.

"திமிலைத்துமிலன்", இ. நாகராஜன் போன்றவர்களின் கவிதைகளும், வேறும் தரமான கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. தமிழ் முரசின் முதல் ஒலியில், நான்கு சிறு கதைகளும் உள்ளன.

நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் மகன், தந்தையின் வாழ்க்கைக் குறிப்புக்களைத் தருகிருர்.

'தமிழ் முரசு' இதழின் அட்டைப்படம் அழகாக அமைந்துள்ளது.

'தமிழ் முரசு' மாத வெளியீடு என்பதை ஆங்கில விளம்பர மொன்றிலிருந்து தான் அறிகிரேமேயொழிய, தமிழில் காணவில்லை. சஞ்சிகையின் விலையும் விளம்பர மொன்றில் தான் காணப்படுகிறது. இவற்றை சஞ்சிகையின் அட்டையிலேயே குறிப்பிட்டிருந்தால் நல்லதென எண்ணுகிரேம்.

அச்சுப் பிழைகள் அதிகம் தென்படுகின்றன. இந்தக் குறையை வரும் இதழ்களில் நீக்குவார்கள் என நம்புகிரேம்.

'தமிழ் முரசு' நல்ல முயற்சி; தளர்[illegible] வளர்ச்சி அடைய [illegible] மென்பதே எமது அவா.

— மணி —


# விற்பனைக்கு

**வீட்டுக் கட்டிடத்துக்குத் தேவையான சகல விதமான இரும்புச் சாமான்கள் எங்களிடம் மலிவான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.**

## என். வயித்திலிங்கமும் சகோதரர் வரை.

**33, 3-ம் குறுக்குத் தெரு, கொழும்பு.**

450, பழைய சோனகத் தெரு, கொழும்பு.

138, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "குமுதம்" போட்டி

குமுதம் புதுமுறைப் போட்டியை அறிவித்ததும், விடைகள் நம்மை நோக்கி, தொடுக்கப்பட்ட கணைகளைப் போல் வந்து குவிந்தன. சரியான விடைகளைப் பொறுக்கி எடுப்பதற்குள் போட்டி ஆசிரியர் திண்டாடித் திணறிப் போனார்.

மொத்தமாக அனுப்பிவைக்கப்பட்ட ஆயிரக்கணக்கான விடைகளில், 290 சரியான விடைகள் கிடைத்தன. அவை நாம் கோரியிருந்த நிபந்தனைகளுக்குட்பட்டிருந்தன. இவற்றுள் மூவருக்கு முறைப்படி நாம் அறிவித்திருந்த பரிசுகளுடன், விசேட பரிசுகள் மூன்று வழங்குவதற்கு சினிமாஸ் ஸ்தாபனத்தாரும் முன் வந்தனர் என்பதைக் கூறி உங்களுடன் மகிழ்ச்சியில் பங்கு பற்றுகிறோம்.

## நன்றி

தொகையான விடைகளை அனுப்பி எம்மைத் திணறடித்த ரசிகப் பெருமக்களுக்கு எம் இதயங் கலந்த நன்றி உரித்தாகுக.

பரிசு பெறும் அறுவருக்கும் எமது வாழ்த்துக்கள். பரிசு பெறாது போன, சரியான விடை அனுப்பிய உங்கள் அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

பரிசளிக்க ஒப்புக் கொண்டும், பின்னர் தாமாகவே மூன்று விசேட பரிசுகளையும் வழங்கிய சினிமாஸ் ஸ்தாபனத்தாருக்கும், ஆதரவும், ஒத்துழைப்பும் நல்கிய 'சினிமாஸ்' ஊழியர்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக.


பரிசுக்குரியவர்களின் விடைகளைப் பொறுக்கி எடுக்க உதவிய சினிமாஸ் ஸ்தாபன அதிகாரி திரு. இராமேஸ்வரம், பல வழிகளில் ஆதரவு நல்கிய திரு. துரைசாமி ஆகியவர்களுக்கும் ரசிகர்கள் சார்பில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

## சரியான விடை

1. விஜயகுமாரி
2. எம். ஆர். ராதா
3. சௌகார் ஜானகி
4. எஸ். எஸ். இராஜேந்திரன்
5. விஜயகுமாரி

பரிசு பெற்றவர்களுக்கான பரிசுகள் உரிய வேளையில் அனுப்பப்பட்டுள்ளன.

—போட்டி ஆசிரியர்.




## குமுதம் போட்டி
### பரிசு பெற்றோர் விபரங்கள்

முதலாவது பரிசு:—
ஸ்ரீ. சந்திரசேகரம்
ஏழூர் முதலாம் குறிச்சி,
செங்கலடி.

இரண்டாவது பரிசு:—
செல்வி. ஜெயந்தி
செல்லத்துரை,
273, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

மூன்றாவது பரிசு:—
வே. சண்முகம்,
87, கொழும்பு வீதி,
கண்டி.

விசேட பரிசுகள் -
* க. கந்தசாமி,
சேகரிக்கும் பகுதி,
த. பெ. இல. 515,
கொழும்பு.
* செல்வி. ப. குமாரசுவாமி,
13, லஸ்கொரின் வீதி,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு—13.
* க. பரமானந்தன்,
177, 4-ம், குறுக்குத் தெரு,
கொழும்பு—11.

## ரசிகப் பெருமக்களுக்கு!

கலை ஆர்வமுள்ள ரசிகப் பெருமக்களுக்கு, கவர்ச்சியான பரிசுகளை அளிக்க வல்ல இனியப் போட்டிகள் இப்பகுதியில் விரைவில் ஆரம்பமாக விருக்கின்றன.

**எதிர்பாருங்கள்!**

பட விமர்சனம்

# தங்கம் மனசு தங்கம்

ஆவன் ஏழை. அவன் உடையவன். சிறுபிராய நட்பு, வளர்ந்ததும் காதலாகக் கனிகிறது. ஆனால் எண்ணம் போல் நடைபெறுவது உலக இயல்பல்ல! அவளைத் தாய் மாமனுக்கு மணமுடிக்க அவள் தந்தை ஏற்பாடு செய்கிறார். மறுபுறம் மேல் நாடு சென்று டாக்டர் பட்டம் பெற்றுவந்த அவனை உறவினர் சும்மா விடுவார்களா! கடன் கொடுத்து உதவி செய்த நெருப்புப் பெட்டித் தொழிற்சாலை அதிபர் வலையம் போடுகிறார். தன் மகன் தங்கத்தை காதலிப்பதை அறிந்த அவனுடைய தாய் தங்கத்தை அழைத்துத் தன் மகனின் நன்மைக்காக அவனை மறக்கும்படி கூறி விடுகிறாள்.

முடிவில் தங்கம் முறை மாப்பிள்ளை ராமுவை மணமுடிக்கிறாள். மனமொடிந்து செயலற்றுச் சிறுமியும் டாக்டரைத் தனக்காகத் தாயாரின் எண்ணப்படி மணமுடிக்க வைக்கிறாள் தங்கம். சிலநாள் இபை வாழ்வு.

ராமு வேலையை விட்டு விலகுகிறான். வேறு வேலை கிடைக்கவில்லை. ஊரவர் தூற்றுதலைக் கேட்டுச் சகிக்க முடியாமல் ஊரை விட்டு ஓடிப் பட்டாளத்தில் சேருகிறான். ஆனால் பாவம் தங்கம் .........துணையாக இருந்த தந்தையையும் இழந்து தவிக்கிறாள். அவளைத் தன் சகோதரியென நினைத்து உதவுகிறார் டாக்டர். ஊர் ஜனங்கள் பிழையாக எண்ணுகின்றனர். வம்பளப்பவர் அட்டூழியத்துடன் மஞ்சள் பத்திரிகையும் சேருகிறது. மனைவியே டாக்டரைச் சந்தேகிக்கிறாள். கதை வளர்கிறது. அத்தனை விசேடமில்லை. ஆனால் சந்தேகங்கள் போக்கப்பட்டு, தங்கம் மனசு தங்கம், என்று நிரூபிக்கப்படும் உச்சம் [ Climax ] நன்றாக அமைகிறது.

டாக்டராகப் பிரேம் நஸீரும், துன்பத்தில் துவளும் தங்கமாக ராஜமும் வழக்கம் போல் நடிக்கிறார்கள். செல்வச் செருக்குடன் தன் கணவனைச் சந்தேகிக்கும் பாகம் விஜயகுமாரியுடையது.

படத்தின் சிறப்பு தங்கவேலுவில் தங்குகிறது. பழைய பேப்பர் வியாபாரி பிரபல மஞ்சள் பத்திரிகை ஆசிரியராக மாறிப் பலவித அட்டூழியங்களைச் செய்து மக்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கிறார். பல நாட்களாகத் திரைக்குப் பின் மறைந்திருந்த 'பிரண்ட்' தனது தயாரிப்பான தங்கம் மனசு தங்கம் படத்தில் தன் பழைய சிரத்தையை நிலை நாட்டுகிறார். சிரிக்க வைக்கிறார். புதுமையான பாகம்.







படப்பிடிப்பு குறைவுடையதாயினும் கதையின் சுவாரஸ்யம் அதனை மறைக்கிறது. வம்பளப்போர் அட்டூழியங்கள்-மக்களுக்கு சிறந்த படிப்பினை. எனினும் போல் நடவாத போதும்.



வாழ்வில் மகிழ்வு பெறலாம் என்று விளக்கும் கதை—ஒரு எடுத்துக் காட்டு.

மஞ்சள் பத்திரிகை

தற்போது தமிழ் சமுதாயத்தில் பலவிதங்களில் அநியாயம் விளைக்கும் மஞ்சள் பத்திரிகைகளின் தகடுதித்தத்தை இப்படம் வெளிப்



படுத்துகிறது. சிரிக்கும் என்ற போதாவில் பலரை எய்த்துப் பிழைக்கும் அநியாயக்காரர்களை அம்பலப் படுத்தும் அரிய சேவையை 'தங்கம் மனசு தங்கம்' செய்கிறது.

—மதி

நாடக விமர்சனம்

# "திரைகடல் தீபர்"

இலங்கை—தமிழகம் ஆகிய இருபகுதிகளையும் பண்டைக் காலத்தில் இணைத்திருந்த சரித்திரக் குறிப்புகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு புனையப்பட்ட கதைதான "திரைகடல் தீபம்". ஆனைப்பந்தி கவின்கலை மன்றத்தினர் மட்டக்களப்பு நகர மண்டபத்தில் இரண்டு முறை இந்நாடகத்தை அரங்கேற்றினர்.

இதன் கதை, வசனம், இயக்கம் ஆகிய மூன்று பொறுப்புகளையும் எழுத்தாளர் அன்புமணி பொறுப்பேற்றுச் சிறப்புடன் செய்து முடித்திருந்தார். அத்துடன் வில்லன் பாகத்தையும் ஏற்றுத் திறம்பட நடித்தார்.

கதாநாயகி அமுதவல்லியாகத் தோன்றிய செல்வி சிவயோகம் பொன்னம்பலம் நகைச்சுவை நாடகங்களில் தான் அதிகமாகத் தோன்றி இதுவரை புகழீட்டியிருந்தார். "சங்கிலியன்" நாடகத்தில் வீரத்தாய் வேட



மிட்டு வீராவேசப் பேச்சுக்களை உதிர்த்தார். "திரைகடல்" தீபத்தில் சோகமே உருவாக மாறி பார்ப்போரை துயரத்துக்குள்ளாக்கினார். காதல் காட்சிகளிலும் நன்கு சோபித்தார்.

மற்றும் பெரிய, சிறிய பாத்திரங்களில் தோன்றிய அத்தனை பேரும் பாத்திரங்களுக்கேற்ப திறம்பட நடித்தனர்.

இந் நாடகம் விரைவில் [illegible] விரைவாகத் தெரிகிறது.

—நாதன்

பட விமர்சனம்

# பட்டி விக்கிரமாதித்தன்

நாடறிந்த கதை விக்கிரமாதித்தன் கதை. விக்கிரமாதித்தனின் முழுக் கதைகளையுமே படமாக்குவதென்பது முடியாது. என். ஆர். புரொடக்ஷன்ஸ் அளிக்கும் பட்டி விக்கிரமாதித்தன் பொதுவாக விக்கிரமாதித்த மன்னனின் வாழ்க்கையின் முக்கிய பாகத்தை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது.

காளியின் அருள் பெறுவது முதற்கொண்டு தேவேந்திர பூபதியிடம் பரிசு பெறுவது, பிரபாவதியை மணப்பது, மந்திரவாதியை வதைப்பது வேதாளத்தை முருங்க மரத்திலிருந்து இறக்கி அடிமை கொள்ளுவது ஆகிய சம்பவங்களையே படமாக்கியுள்ளனர்.

மந்திர தந்திரக் காட்சிகளும், ஆட்டுச் சண்டை, புலிச் சண்டை, சிறுத்தையும் மலைப்பாம்பும் சண்டை பிடித்தல் முதலியன, கவர்ச்சியான முறையில் படமாக்கப்பட்டுள்ளன.

என் டி. ராமராவ் விக்கிரமாதித்தனாகவும், அஞ்சலி தேவி பிரபாவதி தேவியாகவும் தோன்றுகின்றனர். மந்திரவாதியாக எஸ். வி. ரங்கராவ் தோன்றுகிறார். மந்திரவாதியால் ஊமையாகவும், வயது முதிர்ந்தவனாகவும் ஆக்கப்பட்டு, தன்னிலையை வெளிப்படுத்த முடியாமல், விக்கிரமாதித்தன் முன்நிலையில் திண்டாடும்போது அஞ்சலியின் நடிப்பு உச்சக் கட்டத்தைத் தாண்டி விடுகிறது. பார்ப்பவர்கள் அந்த ஒரு கட்டத்தை மறக்கவே முடியாது.

பொற்கொல்லன் சிங்காரமாகத் தோன்றும் ரேலங்கி நம்மைச் சிரிக்க வைக்கிறார். மந்திரவாதியின் குகைக்குள் அகப்பட்டுத் திண்டாடுவது வெகு விநோதம். அவருடைய பேராசைக்கார மனைவி அலங்காரமாகத் தோன்றுபவர் கிரிஜா.

குசலகுமாரி, பத்மினி பிரியதர்சினி, சுகுமாரி, லலிதாராவ் ஆகியோர் நடனமாடுகின்றனர்.

ஸ்டண்ட் சோமுவின் "ஸ்டண்ட்"டுகள் நிரம்ப இடம் பெற்றுள்ளன.

ஜம்பனா இப்படத்தை டைரக்ட் செய்துள்ளார்.

—பானு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் மு. வரதராசனின் "பெற்ற மனம்" படத்தில் விஜயலட்சுமி, எஸ். எஸ். ஆர்., சிவாஜி கணேசன்

# கைக்கிளையின் . . .

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

மாறன்! அவனுக்கு உலகே தெரியவில்லை. அவளை மீறியே வார்த்தைகள் வெடித்தன.

"நீயவனே! இராவணனே! உனது செங்கோல் சாய்ந்திடுக, எந்தக் காதலுக்காக எம்மை வதைத்தனையோ அதே காதலால் உன் யாக்கை புவிமேல் சரிந்திடுக!" ஆம் அவள் புவனமே அதிரக் கத்தினள். அவளை அடக்க ஓடி வந்த அன்னையர் திகைத்தபடி கல்லாகச் சமைந்து நின்றனர்.

அவர்களை அதிர்ச்சியுற நோக்கியவாறு நெருங்கிய இராவணனும் நின்றிருந்தான்.

எதிர்பார்த்தது நடக்கவில்லை. எதிர்பாராதது நடந்தது. பாய்ந்து சென்ற வீரர்கள் இளமருதனைப் பிணைத்திருந்த தளையைமாத்திரம் சிதைத்து விட்டு அவனுக்குத் தலைவணங்கினர்.

கைக்கிளையின் உள்ளம் செத்து வீழ்ந்தது! அரசனைத் தலைநிமிர்ந்து பார்ப்பாளா? குனிந்தாள்—குமுறிக் குமைந்தாள்.

சோகம் படர்ந்த ஒரு புன்னகை சிந்தினன் இலங்கை வேந்தன். அவள் அருகு வந்தான். தோள்பற்றி யணைத்தவாறே இளமருதனை நோக்கி நடந்தான். அந்தக் கவிஞனது கரம் பற்றி அவள் கைத்தலத்து வைத்தான். நிம்மதியோடு சிரித்தான்.

"மகளே!"

அவள் வதனத்தைத் திமிர்த்தினன். "உன்னை ஈன்றவன் ஈசன். வளர்த்தவன் இந்த இலங்கேசன். அதனால் யான் உன் தந்தையடி! இன்று விளையாட்டு வினையாயிற்று மகளே! சாவுக்கு என்றும் அஞ்சான் இராவணன். அந்தச் சாவு தான் இராவணனைக் கண்டஞ்சும். ஆனால் உன் நிலையை நினைத்தால்......!... இதயம் நொந்து எனக்குள்ளே வாடியழுகிறேன். கைக்கிளை! மகளே! உனது இல்லற இன்பம் ஓரேயொரு திங்கள்தான்!"

"ஆ! அப்பா!......"

"ஆம் மக்களே! ஆந்த ஆடலிறையின் அருளால் நீங்கள் எழுவிரும் என்னையடைந்த போது ஏற்பட்ட மகிழ்ச்சிச் செருக்கால் துணைக்கு வந்த அறுமுனியை மறந்து மீண்டோம். அதனால் வெகுண்ட முனிவன், "ஏழிசை மகளிரில் எவராவது வெகுண்டு உன்னைச் சபிக்கும்கால் அவர்களும் அதற்கு இலக்காவார்கள்" எனவும் ஆணையிட்டான். அதன்படி நீவிர் எழுவிரும் எதிர் வரும் பௌர்ணமியில் அரையின்கீழ் மீன் வடிவம் பெற்று என்னை விட்டு நீங்கிக் கடலிடைப் புகுவீர்கள். மகளே! அறிந்திருந்தும் தவறிழைத்தவன் நான்தான்!"...... இராவணனின் கண்ணீர் கைக்கிளைக் கன்னியின் சிரசில் சிந்தி ஆறு கூறிற்று.

அவளை ஏற்றுக்கொண்ட கவிஞன் இளமருதன், தோளோடு அணைத்தபடி ஆறுதல் கூறியழைத்துச் சென்று மாளிகை புகுந்தான்.

'மணம் பரப்பும் மலரின் வாழ்வே ஒரு பகல்தானே! நமக்கு ஒரு திங்கள் போதாதா?' அவனது கவிதையுள்ளம் கதை பேசியது. அந்த நிறைவிலே முப்பத்திரண்டு இதழ்களும் உதிர்ந்து திங்கள் தந்த ஒரு மலர் விழுந்தது.

## (4)

முழு நிலவு காய்ந்தது.

தேன் கடலிலே அந்த ஏழிசை மகளிரும் மூழ்குவதைக் கண் இமைக்காது பார்த்துக் கொண்டே பாடினன் அந்தக் கவிஞன்.

"......அம்பொன்னின் மேனி
அரையின்கீழ் மீன்வடிவம்
செங்கமலமே ஏற்ற கரங்கள
திங்கள் மதிமுகத்துப்
பொங்கிய புன்முறுவல்
பூத்தார் புலமையார்......"

ஆம்; அவளைப் பிரியும்கால் கண்கள் நீரை உகுத்தாலும் அவன் விருப்பின்படி புன்னகை பூத்தாளே கைக்கிளை! அந்தக் காட்சியை இதயம் மறக்குமா? அவனது கண்ணீர்தான் வற்றுமா? இலக்கிய உலகுதான் இந்த அடிகளை மறக்குமா?

# இ.தொ.காவின்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோக ஆசை பறிக்க முடியாத மனிதர்;

உயர் பதவி வாங்க முடியாத மனிதர்;

உறுதியும், கருத்தும் நிரம்பிய மனிதர்;

நேர்மை கொண்ட மனிதர்;

பொய்மை உரையா மனிதர்.

[இ. தொ. காங்கிரஸுக்கு பதிலளிக்கு முகமாக எழுதப்பட்ட இக்கட்டுரை 'லேக் ஹவுஸ்' பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டதெனினும் அ[illegible] கள இதனைப் [illegible] வில்லை.]

# சாதி இரண்டொழிய வேறில்லை..

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

தம் பற்றிப் பேசும் வேளையில், சிரிப்புத் தானுண்டாகின்றது.

கலப்பு மணம் சாதிப் பிரச்சினையைத் தீர்க்கும் அருமருந்தெனலாம். மனிதன் மனிதனை இல்லாத காலத்தில் வகுக்கப்பட்ட வேற்றுமைகளையெல்லாம் கற்றுணர்ந்த வாலிபர்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டுமா? நிச்சயமாக இல்லை!

இதுகாறும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த மூடக் கொள்கைகள் பலவற்றை இருந்த இடம் தெரியாது பெயர்த்தெறிந்த இளைஞர்கள் சாதிப்பித்தனை விரட்டி வெகு சீக்கிரத்தில் தாழ்த்தப்படுவோர் என அழைக்கப்படும் நம் சகோதரர்களுக்கு விமோசனம் அளிப்பரெனத் திடமாக நம்ப இடமுண்டு.

## கொடிது! கொடிது!

தாழ்ந்த ஜாதியினர் என்றழைக்கப்படுவோர்களுடன் தாம் தொடர்பு கொள்வதற்குக் காரணம் அவர்கள் துப்புரவற்றவர்களாக இருப்பதே என்று உயர் ஜாதி எனத் தம்பட்டமடிக்கும் என் நண்பர் ஒருவர் கூறியபோது என்னையும் மீறிச் சிரிப்பு ஏற்பட்டு அதனை அவரிடமிருந்து ஒளிப்பிய தகாத வார்த்தைகள் சிலவற்றையும் கேட்க வேண்டியேற்பட்டது.

திரைகடல் ஓடி மீன் பிடித்துவரும் மீனை உண்ணும்போது சுத்தம் பார்ப்பதில்லையா? அன்றிக் கள்ளிறக்குவோரின் மனையில் கலம் ஏந்தி மதுவருந்தி மயக்க நிலையில் ஆடையின்றி முற்றத்திலே புரளும் போது சுத்தம் பார்ப்பதில்லையா?

அப்பொழுதெல்லாம் "சுத்தம்" என்ற வார்த்தைக்கு "உயர் ஜாதியினரின்" அகராதியில் அர்த்தமே வேறு போலும்!

ஆனால் கலப்பு மணம் செய்தவுடன், பக்கத்திலே பந்தியமர்ந்தவுடன் சாதி, சுத்தம் எல்லாம் அலறிப் பார்க்கக் கிளம்பி விடுகின்றனர். இவற்றையெல்லாம் நன்காராயின் "துப்புரவின்மையால் தள்ளி வைக்கின்றோம்" என்பது விதண்டாவாதம் எனத் தெள்ளிதிற் புலப்படும்.

அப்படியே அவர்கள் துப்புரவற்றவர்கள் என்றே வைத்துக் கொள்வோம். அதற்காக அவர்களை அப்படியே விட்டுவைப்பது மனுநீதிக்கு உகந்ததா? காந்தியைப் படிக்கின்றோம். யேசுவை வழிபடுகின்றோம். புத்தரைப் போற்றுகின்றோம். விவேகானந்தரை மதிக்கின்றோம். பற்பல பெரியார்களின் சரித்திரங்களைக் கற்கின்றோம். "மதங்களிற் சிறந்தது நமது மதம்" என ஒவ்வொருவரும் பெருமையடித்துக் கொள்கின்றோம். ஈ, எறும்பைக் கூடக் காரணமின்றி வதைப்பது பாவம் என்ற மதக் கோட்பாடுகளைக் கைக்கொள்கின்றோமெனக் கூறிக்கொண்டு, நமது சகோதரர்களைத் தூரத்தே தள்ளி வைத்தல் கொடிது! கொடிது!!

## கல்வி புகட்ட வேண்டும்

அசுத்தமாயிருப்பவர்கள், நற்பழக்க வழக்கங்கள் இல்லாது வளர்ப்பவர்களைத் திருத்துவது அவர்களுக்குக் கல்வியறிவூட்டுவதின் மூலமே முடியுமென்ற பேருண்மையைப் பலர் சுட்டிக் கழித்துவிடுகின்றனர்.

"மனிதன் ஆழலின் [illegible] குடும்பங்கள் என்றழைக்கப்படும் பலருக்குப் பிறக்கும் மழலைச் செல்வங்கள் தங்கள் பெற்றோர் தமக்குப் பரம்பரைச் சொத்தாக அளித்த "கீழ் ஜாதி" என்ற பட்டத்தைப் புனைந்து சீரழிகின்றனர். வறுமை காரணமாகவும் இவர்களை யாம் புறக்கணித்தலாகாது.

இதுகாறும் உலகை உய்வித்த உத்தமர்கள் பலரும், உலகையாளத் துடித்து மாண்டவர்களிற் பலரும் ஏழ்மைத் தாயின் புதல்வர்கள் அன்றி மாடி வீட்டுச் சீமான்களல்ல. அவதார புருடர்கள் பலர் கூடத் தாழ்ந்த குடும்பங்களிலேயிருந்து தோற்றியுள்ளனர் என்பதும் கவனிக்கற்பாலது.

இவர்கள் தாழ்ந்த குலம் என்பதால் பூமாதேவி இவர்களின் திறமையை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் அளிக்க மறுத்துவிட்டாளா, அல்லவே? அங்ஙனம் கல்வியறிவற்றவர்கள் நாடாள முடியுமாயின் நம் சகோதரர்களுக்குக் கல்வியறிவூட்டினால் அவர்களிலிருந்து உலகம் வியத்தகு மாமேதைகள் தோன்றக் கூடுமல்லவா?

சட்டங்கள் மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணல் நாடிய நண்பர் ஒருவரின் ஆங்கிலக் கட்டுரையைக் கண்டேன். ஆயிரம் சட்டங்களை அரை மணி நேரத்தில் ஆக்கி அழித்து விடல் எளிது. ஆனால், மக்கள் உள்ளத்திலே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது அவ்வளவு சீக்கிரம் நிறைவேறக் கூடிய தொன்றன்று. ஆனால், உள்ளம் உணர்ந்து உண்டாகும் சீர்திருத்தமே என்றும் நிலைத்து நிற்கும். சட்டமும் அடக்குமுறையும் காலப் போக்கில் இருந்த விடம் தெரியாது அழிந்து ஒழிந்துவிடும். ஆனால் அதே கட்டுரையில் நண்பர் கூறியுள்ள "கலப்பு மண" முறையை மனதார வரவேற்கலாம். பகுத்தறிவுள்ள பல வாலிபர்கள் பல நாடுகளிற் சரித்திரத்தையே மாற்றியமைத்துள்ளனரென்றால் நம் இளைஞர்கள் மற்றவர்களுக்குச் சளைத்தவர்களா என்ன?

## செயலில் இறங்குங்கள்!

சாதிப் பேயை விரட்டியடித்து, அவ்வரக்கனின் பிடியிற் சிக்கித் தவிக்கும் பல்லாயிரக்கணக்காக மக்களை விடுவித்து, இன்னல்கள் அகற்றி அவர்கள் சுபீட்சத்துடன் வாழ வழி செய்யின், சரித்திரத்திலேயே புது ஏடொன்றைத் திறந்து தமிழ்த் தாயின் விலங்கு அகற்றிய பெருமை நம்மைச் சாரும். ஆகவே இளைஞர்களே, காலம் தாழ்த்தாது செயலில் இறங்குங்கள்!

# சங்கப்பலகை

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கும் இடம் தந்து, எழுதியுள்ளார்.

நூலின் ஆரம்பத்தில் காணப்படும் ஆய்வுரை என்ற அத்தியாயத்தின் கீழ் ஆசிரியர் நாடும் மொழியும், காலவரையறுப்பு இடர்ப்பாடுகள், சங்க காலம், தொல்காப்பியத்தின் காலம், பொருத்தமற்ற கருத்துக்கள், விநோதமான படைப்புக்கள், பிற மொழிப் புலமை, சிட்டுக் கவிகள், உரையாசிரியர்கள், பெண்பாற் புலவர், தமிழ் இலக்கிய வரலாற்று நூல்கள், ஆங்கில நூல்கள், கழகங்களின் நற்பணி, இந் நூல்கள் போன்ற பல்வேறு விடயங்களைப் பற்றியும் சுருக்கமாக, ஆனால் சுவையாக எடுத்தியம்பியிருக்கிறார்.

நூலின் இறுதியில், சங்க காலத்தில் தோன்றிய எட்டுத்தொகை முழுவதிலும் இப்போதுள்ள ஈராயிரத்து மூந்நூற்றெழுபது பாட்டுக்களையும் பாடிய நானூற்றறுபத்தைந்து புலவர்களின் பெயர்ப்பட்டியலும் தரப்பட்டுள்ளது. புலவரகர வரிசையும், நூலகர வரிசையும் கூடவே இடம் பெற்றுள்ளன.

ஆசிரியர் தமது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளபடி "ஓரினத்தின் வரலாற்றை அறிதற்கும், அவ்வினத்தின் வாழ்வியலை உணர்தற்கும், அவ்வினத்தின் தாய்மொழி இலக்கியத்தை நன்கு துய்ப்பதற்கும் அவ் வினத்தின் தாய்மொழி இலக்கிய வரலாற்றறிவு இன்றியமையாதது".

இந்த உண்மையை உணர்ந்தோர்க்கு 'நூற்றுண்டுகளில் தமிழ்' இன்றியமையாதது.

— மணி —



மேல் படம்:- அரியாலை சன சமூக நிலையத்தின் 13-வது ஆண்டு விழாவின்போது நடைபெற்ற 'புலித்தேவன்'' நாடகத்தில் ஒரு காட்சி.

கீழ்ப் படம்:- ஆரையம்பதி கவின்கலை மன்றத்தினரின் "திரை கடல் தீபம்'' என்னும் நாடகத்திற்குத் தலைமை தாங்கிய மட்டக்களப்பு பிரதிநிதி திரு. செ. இராசதுரையுடன் நடிகர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சைவமும் தமிழும் வளர்த்த விபுலாநந்த அடிகளார்

ம. மகேஸ்வரன்

ஈழத்தில் வதியும் இன் தமிழ் மக்களே! இந்நாள் (19—7—62) உங்களின் நன்னாளாகும். இந்நாளே, இமயத்தின் இயல் கண்ட ஈழத்தின் முதல் மணியும், சைவமும், தமிழும் தமிழர் பண்பாடும் தலையெடுக்கச் செய்தவனும் அறிவும் அருளும் ஒருங்கே அமையப் பெற்றவனுமான அருட்டிரு விபுலாநந்தனின் நினைவு நாளாகும்.

ஈழத்திலே நாவலர் பெருமானுக்குப்பின் சைவநெறி தழைக்கவும், செந்தமிழ் செழிக்கவும் செய்தவர் இம்மகானே. இவர் கிழக்கிலங்கையின் தெற்கே யுள்ள தொன்மையும் பெருமையும் மிக்க கிராமமாகிய காரேறு தீவு வில் 1892-ம் சாமிநாதருக்கும் கண்ணம்மையாருக்கும் தவமே வடிவெடுத்த குழந்தையாக அவதரித்தார். இன்று அவர் அவதரித்த ஊதூர் காரைதீவு என வழங்கப் பெறுகிறது. தொண்டு செய்வதே தொழிலெனக் கொண்ட இம்மகான் பல பட்டங்களைப் பெற்று ஈற்றில் இராமகிருஷ்ண சங்கத்துத் துறவியானார். இவர் சிலப்பதிகாரம், இராமாயணம், மகாபாரதம், கந்தப் புராணம் போன்ற அரிய தமிழ் இலக்கியங்களின் பெருமைகளை நன்குணர்ந்தவர். இவ்விலக்கியங்களில் செந்தமிழர் சிறப்பும் நாகரிகமும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. இவ்விலக்கியங்களைப் படித்த பெரியார் இவற்றின் பெருமைகளை உலகினுக்கு எடுத்துக் காட்டவேண்டுமென்று ஆசை கொண்டனர், இதனாலே இவர் தமிழ் எனும் பெருநதியிலே மூழ்கித் தொன்மை மிகுந்த இந்தமிழின் பெருமையை ஆராயத் தொடங்கினார். இவ்வாராய்ச்சியிலே அடிகளார் வெற்றியும் அடைந்தார்.

விபுலாநந்த அடிகளார் தமது இடைவிடாத ஆராய்ச்சியினாலே பழந்தமிழர் பண்ணையும், அவர்களின் கலைத் தத்துவங்களையும் கண்டறிந்தார். இவர் முக்கியமாக இசைக்கலையின் தத்துவங்களில் ஈடுபட்டார். பழந்தமிழர் கையாண்ட இசைகளையும், இசைக் கருவிகளின் வகைகளையும் கண்டு பிடித்தார். முனரியாழ், மகரயாழ், சதுர்த்தண்டியாழ், பாரிசாதயாழ், கருதியாழ், பேரியாழ் முதலிய யாழ்கள் ஆராய்ச்சியின் பயனாய் அறியப்பட்டன. இவரது ஆராய்ச்சிக்கு இளங்கோவின் சிலம்பு ஏற்ற துணை செய்தது. கருவிகளைக் கண்ட அடிகளார், அவைகளின் தன்மைகளை உலகினுக்கு உணர்த்தும் பொருட்டு சரிகமவையும், பதனிசவையும், தனித்தனியே வடித்தெடுத்து ஈழத்தின் மங்காச் சுடரொளியாய் யாத்தருளினார் யாழ்நூலை. ஈழமணி விபுலாநந்தர் அத்தோடு மட்டுமல்லாமல் நாடகத் தமிழை விளக்கும்பொருட்டு 'மதங்க சூளாமணி' என்னும் தமிழ் நூலையும் உலகினுக்கு உவந்தளித்தார்.

இவர் தமிழர் பண்பாடும் சைவநெறியும் செந்தமிழும் செழிக்க முகமாக யாழ்ப்பாணத்திலே ஒரு பண்டித சங்கத்தையும், தேன் பாயும் திருநாடான மீன் பாடும் மட்டக்களப்பில் சிவானந்த வித்தியாலயம் என்னும் கல்லூரியையும் நிறுவியுள்ளார். இவர் தன் முயற்சியால் அமைத்த சிவானந்த வித்தியாலயத்தின் சைவநெறியும், பண்டையர் பண்பாடும் அன்று தொடக்கம் கையாளப்பட்டு வருகின்றன. மட்டக்களப்பை மகிமை மிக்க இடமாக்கி ஆலய ஒழுங்கையும் தமிழர் பண்பாட்டையும் திகழச் செய்த மகான் இவரே. இன்னும் பல கல்லூரிகளை ஆங்காங்கே நிறுவி இராமகிருஷ்ண சங்கத்தின் புகழை அகில இலங்கையிலும் பரவச்செய்தவர் இவரே. இவர் செந்தமிழை நாவால் மட்டுமின்றிச் செய்கையாலும் சிந்தனையாலும்கூட வளர்த்தார்.

விபுலாநந்த அடிகள் தமிழுக்கும் சைவத்துக்கும் ஆற்றிய தொண்டை அறிந்த தமிழ் மக்கள் வருடந்தோறும் இவரை நினைத்து விழாவெடுக்கின்றனர். இவரது ஞாபகச் சின்னமாக ஓர் மணி மண்டபம் நிறுவப்பட்டுள்ளது. இவரது நினைவு நன்னாளிலே இவர் சமாதி கொண்டிருக்கும் தலத்திலே விசேட பூசைகளும் பிரார்த்தனைகளும் நடைபெறுகின்றன. இவர் அமைத்த கலைக்கூடமான சிவானந்த வித்தியாலயத்தின் மாணவர் இவர் பாடிய பாக்களைப் பாடி அவருக்கு அஞ்சலி செய்கின்றனர்.

விபுலாநந்தரின் வாழ்க்கை தமிழ் பேசும் மக்களுக்குப் [illegible] கையாகும். அன்னாருக்குத் தமிழ் பேசும் மக்கள் அஞ்சலி செய்வார்களாக.

---

அன்புள்ள மருமக்களே!

வணக்கம். ஆகஸ்ட் மாதம் 24, 25, 26-ல் மன்னாரில் தமிழரசுக் கட்சியின் வருடாந்த மாநாடு நடைபெறவிருக்கின்றது. அதையொட்டி 'சுதந்திரன்' விசேட இதழொன்றை வெளியிட உத்தேசித்துள்ளது.

அந்த இதழில் உங்களின் 'வளர்மதி'க்கும் விசேட இடம் உண்டு. தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு கட்டுரை, கவிதைகள் எழுதி அனுப்புங்கள். அவற்றில் சிறந்தவை எனக் கணிக்கப்படுபவைக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

சிறந்த கட்டுரைக்கும், சிறந்த கவிதைக்கும் தனித் தனியே ஒவ்வொரு நூல் பரிசாக அளிக்கப்படும்.

கட்டுரை, கவிதை அனுப்ப வேண்டிய முடிவு திகதி 15—8—62 ஆகும்.

எங்கே, எழுதி அனுப்புங்கள் பார்க்கலாம்!

வளர்மதி மாமா

---

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி
### சுதந்திரன் மாணவர் மன்றம்
### அங்கத்தவர் மனுப் பத்திரம்

இல. 1

பெயர் ____________________

பாடசாலை ____________________

விலாசம் ____________________

____________________

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் ____________________ கையொப்பம் ____________________

---

# ஆட்டுக்குட்டி

சாய்ந்தமருது, யூ. எல். ஆதம்பாவா.

ஆட்டுக்குட்டி நல்ல ஆட்டுக்குட்டி
அழகு மிக்க ஆட்டுக்குட்டி
தோட்டத்தில் மேயும் ஆட்டுக்குட்டி
துள்ளிப் பாயும் ஆட்டுக்குட்டி

பெட்டி மேலே ஏறிடும்
பெரு மகிழ்ச்சி கொண்டிடும்
கட்டிப் போட்டு விட்டாலோ
கவலை கொள்ளும் ஆட்டுக்குட்டி

வேலைக் காலால் தட்டிடும்
வீரன் போல சென்றிடும்
நீரை நாடி ஓடிடும்
நீண்டு வளர்ந்த ஆட்டுக்குட்டி

கவரைத் தலையால் முட்டிடும்
கறு கறுப்பாய் நின்றிடும்
'அவரை'க் கொடியைக் கடித்திடும்
அடிக்கச் சென்றால் எதிர்த்திடும்.

சோற்றைக் கூட உண்டிடும்
சுற்றிக் கூர்ந்து பார்த்திடும்
ஆற்றினருகே சென்றிடும்
அமைதியாக உறங்கிடும்.

வெள்ளை நிற ஆட்டுக்குட்டி
விலையுயர்ந்த ஆட்டுக்குட்டி
முள்ளு நிறைந்த காட்டினிலும்
செல்லு மெந்தன் ஆட்டுக்குட்டி.

---

# தங்கத் தாத்தாவின் கவிதை இன்பம்

க. ராணி நவமணி, மட்டக்குழி.

"கொஞ்சு மொழிக் கிஞ்சுக வாயஞ் சுகமொன்றினிதே" என்பது பாரதியாருக்கு ஒரு சிட்டுக்குருவி போன்று தாத்தாவுக்குஒருகிள்ளை, கொஞ்சு மொழியாகிய மழலை மொழி பேசும் கிஞ்சுகம், அதாவது இன்பம் சுகம் அளிக்கும் வாயையுடைய அஞ்சுகம் என்று இனிய அவர் காணும் கவின் கண். அதனைக் காணமுடியாத நம் கண்ணென்ன கண்ணோ! சிறிய சொண்டை உடைய கிளியை அழகுக் கண் கொண்டு ரசித்து இன்பக் கவிதையைப் புனைந்து விட்டார். இத்தனைக்கும் காரணம் கவிதைகளை நயத்தோடு படைக்கும் அவரது திறமையே.

நம் நாட்டை - சமுதாயத்தைத் திருத்த நல்ல கவிதைகளைப் பாடிய இவர் ஓரிடத்தில்

"இரவு விடிந்தது கேளீர் — தமிழ்
இளவள ஞாயிறு எழுந்தது பாரீர்"

என்று கூறுகிறார்.

இவ்வடி கவிஞ் புலவர் பெருமான் தமிழ்மொழியை இளவள ஞாயிறு என்கிறார். அதாவது பிற மொழி ஆசையினால் அந்தகாரத்தில் ஆழ்ந்திய தமிழ் மக்களின் உள்ளம் தமிழ் மொழி என்னும் கதிரவனால் ஒளி பரப்பப்பட்டு அவ்விருளைப் போக்கி அருளைப் பரப்பி மேலெழுந்ததைப் பாரீர் என்கிறார். இதில் நயத்தின் சிறப்பு யாதெனில் காலைக் கதிரவனின் கதிர்கள் எத்தனை இன்பகரமாக இருக்கிறது. அதனைத் தமிழுக்கு ஒப்பிட்டு இன்பம் காண்கிறார். இள ஞாயிறு என்று எடுத்த புலவர் அஃது ஒரு வள ஞாயிறு என்று சேர்த்தார். இளமை பொருந்திய வளமான கதிரவன் என்று பருவமும் அளிக்கிறார். இதில் தான் இன்பம் தங்கியிருக்கிறது. அமிர்தம் போன்ற இவ்வடிகள் அமுதசுரபிகள். அதனை ஆக்கித் தந்த பெருமை தங்கத்தாத்தாவுக்கே. தமது முதுசொத்தைத் தமிழ் உலகிற்கு வழங்கிய பெருமையும் அவருக்கே உரிய தனி உரிமை; அதிலிருந்து ஊறும் கவிதை இன்பத்தைப் பருக முடியாது, "உமிகுத்திக் கைசலித்தவாறு" போல் இருப்பதால் ஆம் பயன் யாது.

தங்கத் தாத்தாவின் கவிதைகள் தேன் கூடு போன்றவை; தெளிவான பொருள் பொதிந்த அமுதகலசம். சிறுவர் கூட இலகுவிலே கற்றுப் பொருளுணர்ந்து இன்பம் எய்தும் திறன் பெறுவர்.

"தென்மடை இங்கு திறந்தது கண்டு
நேசுகித் திரிவமடா"

என்றார் ஒருவர்; அவரது ஆடிப்பிறப்புப் பாடல் சிறுவர்கட்கெல்லாம் பனங்கட்டிக் கூழினையும் கொழுக்கட்டையையும் நினைவூட்டி நாவிலே சலம் ஊறச் செய்யும். மனதிலே இன்பம் ஊறிப் பெருகும். கத்தரித் தோட்டத்து மத்தியிலே காவல் காக்கும் சேவகனைப் பாடத் தொடங்கி விட்டால் சிறுவர், பட்டாள அணி வகுப்பே நடாத்தி விடுவர். இவ்வளவா? இன்னும் எத்தனை கொள்ளை இன்பம் குலவு கவிதைகள் சிறுவர் கட்காகப் பாடியிருக்கிறார். அணில் வேட்டையிலும் மேலாக விமனுக்குத் தாத்தாவின் தாடியிலேயன்றோ இன்பம் பிறந்துவிட்டது; அதைப் பிடித்திழுத்துப் படுத்திய பாடு! அப்பப்பா! படிக்கப்படிக்கத் தெவிட்டாத இன்பம் தருவன அன்றோ.

தங்கத்தாத்தாவுக்கு இரு விழிகள், ஒன்று தமிழ், மற்றொன்று சைவம். அந்த இரு விழிகளும் இன்பம் பெற எண்ணரிய கவிதைகள் பாடியுள்ளார்கள். இலங்கை வளம், தாலவிருட்சம், கதிர்காமான்மியம், கதிரைச் சிலேடைவெண்பா, சிறுவர் செந்தமிழ், உயிரிளங்குமரன் நாடகம் முதலிய புலவர் பெருமானின் கவிதைகளில் ஒரு துளி உண்டாலே போதும். தேன் உண்ட வண்டுபோல இன்பம் காணலாம். தாத்தாவின் கவிதையிலே செந்தமிழ்த் தேன் நிறைய உண்டு. அஃது "என்றும் புலராது ஞானர் நாட் செல்லுகினும் நின்றலர்ந்து தேனளிற்றும் நீர்மையது". தங்கத்தாத்தா ஒரு பாற் சமுத்திரம், அதன் கண் தோன்றிய கவிதைகள் தேவாமிர்தம். அதை உண்ணும் நாம் என்றும் அழியா இன்பம் பெறும் பாக்கியசாலிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

### சேமமடு அறிஞர் பாடசாலை பெற்றார்—ஆசிரியர் சங்கம்

2-7-62 திங்கட்கிழமை மாலை எட்டு மணியளவில், பாடசாலை மண்டபத்தில் கூடிய மேற்படி சங்கத்தின் கூட்டத்தில் பாடசாலை வளர்ச்சிபற்றிய கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

பின்னர் புதிய நிருவாக சபையினர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. பொன். சின்னத்துரை. உப தலைவர்: திரு. நா. ஏகாம்பரம், காரியதரிசி: திரு. செ. மணியம் உபகாரியதரிசி: திரு. வ. க. சபாபதிப்பிள்ளை, தனாதிகாரி: திரு. சி. கந்தையா, உபதனாதிகாரி: திரு. வி. செல்லத்தம்பி, நிருவாக சபை அங்கத்தவர்: திருவாளர்கள் வே. கார்த்திகேசு, ஐ. இரத்தினம், க. நாகமணி பொ. அருணாசலம், நா. நல்லதம்பி, சி. ஆறுமுகம், மா. வைரமுத்து.

இறுதியில், சென்ற மாதம் பாடசாலையில் நடைபெற்ற தீ விபத்துப்பற்றிய கலந்துரையாடலின்பின், மேலதிகாரிகளுக்கு அறிவித்தற்கான தீர்மானமொன்றில், தலைமை ஆசிரியரின் அரிய சேவைபற்றியும், அவரது சேவையை நீடித்துத் தர வேண்டுமென்பது பற்றியும், அவரிடமுள்ள பூரணமான தமது நம்பிக்கை பற்றியும் குறிப்பிட்டிருந்தது ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப் பட்டது.

இரவு பத்தரை மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

---

### மாவை—பழை இ. மு. சங்கம்

மாவை—பழை கிராம முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் மாவை நெசவுசாலையில் நடைபெற்றது. சங்கத்தலைவர் தலைமை வகித்தார். நிர்வாக சபைத் தேர்தலில், திரு. கா. பால சுப்பிரமணியம் செயலாளராகவும், திரு. சின்னையா தலைவராகவும், திரு. கே. கந்தையா பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். ஏழுவரைக் கொண்ட "சமாதான சபை"யும் தெரிவு செய்யப்பட்டது.

---

### ஈழத்து இளம் கலைஞர் இயக்கம்

யாழ். நாவலர் பாடசாலை மண்டபத்தில் தலைவர் டாக்டர் அ. வை. தங்கக்கணபதி அவர்கள் தலைமையில் ஈழத்து இளம் கலைஞர் இயக்கப் பொதுக் கூட்டம் 22-6-62 வெள்ளி மாலை 5 மணியளவில் நடைபெற்றது.

'சமூகக்குமுறல்' என்ற சமூக சீர்திருத்த நாடகத்தை வரும் பொங்கல் தினத்தில் அரங்கேற்றுவதென்றும், கலைவாணர் நினைவு விழா 30-8-62 நடத்துவதென்றும், இளம் கலைஞர் பொது மகாநாடு 21-12-62 நடத்துவதென்றும், பாரதி விழா செப்டெம்பர் மாத இறுதியில் நடத்துவதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

---

### நாவலர் விளையாட்டு கழகக்கூட்டம்

சரவணை நாவலர் விளையாட்டுக் கழக வலைவியாயின் மாதாந்தக் கூட்டம் ஆசிரியர் திரு. க. சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் தனது தலைமையுரையில் அங்கத்தவர்கள் சாதி சமயவேறுபாடு இன்றிக் கழக வளர்ச்சிக்காகப் பாடுபட வேண்டுமெனக் கூறினார்.

செல்வி க. இந்திராணி, ஆசிரியை, பேசும் பொழுது இக்கிளை மற்றுமிடங்களிலுள்ள நமது கிராமத்தவர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்கும் எனக் கூறியதுடன், மூதூரில் தமிழ் அரசு அபேட்சகர் வெற்றியீட்டியது இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் வெற்றியாகும் என்றும் கூறினார்.

காரியதரிசி தனது நன்றியுரையில் மூதூரில் தமிழ் அரசு வெற்றியீட்டியது அங்கு வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையைக் காட்டுவதுடன் முஸ்லிம்களின் தாய் மொழி தமிழ் என்பதையும் நிரூபித்துள்ளது. மூதூரின் தமிழ் அரசு அபேட்சகர் எம். ஈ. எச். முகம்மது அலிக்கும், வாக்காளருக்கும் இக் கழகம் தனது நன்றியைத் தெரிவிக்கிறது எனவும் அவர் கூறினார்.

---

### கொல்லாந்தை இ. மு. க. தேர்தல்

இலங்கை திராவிட முன்னேற்றக்கழக கொல்லந்தை மாவட்டத்தில் புது வருட தேர்தல் (1-7-62) ஞாயிற்றுக்கிழமை 3 மணிக்கு பணிமலையில் திரு. இரா. சு செல்வத்துரை அவர்கள் தலைமையில் நடைபெற்று பல தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேறின.

#### தீர்மானங்கள்

(1) இலங்கையிலே வசிக்கும் எல்லா திராவிட மக்களுக்கும் மொழி உரிமை, குடி உரிமை, வாக்குரிமை, ஆகியன அளிக்கப்பட வேண்டும்.

(2) சாதி பேதத்தை அகற்றி எல்லோருக்கும் பொதுவான கல்வியை அளிக்குமாறு இக்கழகம் அரசாங்கத்தை வேண்டுகிறது.

(3) இலங்கையர் மயத் தீர்மானத்தை இக் கழகம் கண்டிக்கிறது.

(4) தோட்டப் பாடசாலைகள் அனைத்தையும் அரசாங்கம் எடுத்து நடத்த வேண்டும். பிள்ளைகட்கு அவரவர் தாய் மொழியிலேயே பாடபோதனை வேண்டும்.

(5) தோட்டப் பகுதியிலே ஆண்களுடன் பெண்களுக்கும் சம்பளம் வேண்டும்.

(6) திரு. எஸ். தொண்டமான் அவர்கள் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஒத்துழைக்குமாறு இக் கழகம் வேண்டுகிறது, இல்லாவிட்டால் அன்னவர் தமது பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டும்.

(7) புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மூதூர் தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. முகம்மது அலியை இக் கழகம் பாராட்டுகிறது.

---

### புதிய நிர்வாகிகள் தெரிவு

அட்டன், வெல்லவா புதுக்காடு, இ. தி. மு. க. நிர்வாகிகள் தேர்வு 24-6-62ல் நாவல் நகர் மாவட்டக்கிளை செயலாளர் தோழர் மு. இரட்ணம் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. அத்தருணம் கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தோட்டக்கிளைத் தலைவர்—புரட்சி வீரன் டி. கண்ணன். துணைத்தலைவர்: திரு. கே. முத்துசாமி. செயலாளர்: திரு. டி. பெ[illegible], பொருளாளர்: [illegible] இராமசாமி, தொண்டர் தலைவர்: திரு. எம். இராமசாமி, தொண்டர் துணைத் தலைவர்: திரு. எஸ். சிவ பெருமாள், செயற்குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள் கே. இராமலிங்கம், எம். களியப்பெருமாள், எம். பெருமாள்.

---

### கமழுந்தமிழ் மன்றம்

இன்று நாம் வதியும் இலங்கைத்தீவு இரு மொழி பேசும் இனங்களைக் கொண்டுள்ளது. அந்த இரு பெரும் இனங்களில் ஒன்றாகிய தமிழினம், தன் விழி போன்ற மொழியைப் பேணச் சங்க காலந்தொட்டு இன்று வரை கழகங்கள் மன்றங்கள் அமைத்துவந்துள்ளது. இன்று ஈழத்திலே மூலை முடுக்கெல்லாம், மன்றங்கள் உருவாகி விளம்பரங்[illegible] பண்ணி இரண்டொரு வாரங்களில் மறைந்து விடுகின்றன. இனிமேல் அந்த நிலை உருவாகாமல் "ஆழ உழுவதைக் காட்டிலும் அகல உழுவதே சாலச் சிறந்தது" என்ற நிலைவை மனத்தில் நிறுத்தி தம்மாலியன்ற பணியினை ஆற்றுமாறு கழகத்தை வேண்டுகிறேன்.

இவ்வாறு ஞாயிற்றுக்கிழமை (1-7-62) அன்று 6 மணிக்கு நடந்த கமழுந் தமிழ் மன்ற அமைப்புக் கூட்டத்தில் தேசபக்தன் நிர்வாகி திரு. அந்தனி ஜீவா குறிப்பிட்டார். மேலும் பலரும் பேசினார்கள். இறுதியில் செயலாளரின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

பின்வரும் நிர்வாகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: க. சு முத்து, செயலாளர்: நெல்லை வாணன், பொருளாளர்: அறிவொளி, துணைத்தலைவர்: ஆடலரசு, துணைச்செயலாளர்: கடுங்கோவன், துணைபொருளாளர்: முத்தழகு, நூல் நிலையபொறுப்பாளர்: இளம்வழுதி.

---

### ஆரையம்பதியில் பொருட்காட்சி

ஆரையம்பதி நலவுளர்ச்சிக் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட விவசாய—விஞ்ஞானக் கைத்தொழில் பொருட் காட்சி ஆரையம்பதி இராமக்கிருஷ்ண சங்கத் தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. காட்சியின் முடிவில் விவசாய சம்பந்தமான படக் காட்சியும் நடைபெற்றது. மேற்படி காட்சியை இராமக்கிருஷ்ண சபைச் சந்நியாசி உயர் நடராச நந்த அடிகளார் திறந்துவைத்தார். திறப்புவிழா முன்னுரையில் "விபுலாநந்த அடிகளார் கிராம அபிவிருத்தியில் காட்டிய கவனத்தையும் செய்த முயற்சியையும் எவரும் மறக்கமுடியாது. அடிகளாரின் பரம்பரையில் தோன்றிய இளைஞர்களாகிய நீங்கள் அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதைக் காண அளவிலா மகிழ்ச்சியடைகின்றேன். அன்று இராமக்கிருஷ்ண சபை நடத்திவந்த பாடசாலைகளை இன்று அரசாங்கம் கையேற்று விட்டது. பாடசாலைகள் மூலம் இராமகிருஷ்ண சபை செய்த சேவைகளை இது போன்ற பொதுநல சங்கங்கள்தான் செய்துவர வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

கழகக் காரியதரிசி-திரு. க. அமரசிங்கம், ஆசிரியர் அவர்கள் கழகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட காட்சியின் நோக்கத்தை விளக்கி உரை நிகழ்த்துகையில், இது போன்ற காட்சிகள் இப்பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்குப் புத்தூக்கம் கொடுக்கும் பயனுள்ள செயல் என்பதை உணர்ந்தே ஆரையம்பதிக் கிராமத்தில் முதன் முதலாக இப்பொருட்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்ட தெனக் குறிப்பிட்டார்.

---

### ஆனந்தா இளைஞர்சங்கம் நாவடி

ஆனந்தா இளைஞர்சங்கத்தின் ஏழாவது ஆண்டு விழாவில் தெரிவு செய்யப் பட்ட நிர்வாகிகள்:

தலைவர்: திரு. க. சிவானந்தன், உபதலைவர்: திரு. வை. விஜயகமூர்த்தி, செயலாளர்: திரு. க. கனகலிங்கம், உபசெயலாளர்: திரு. ம. தனபாலசிங்கம், தனாதிகாரி: திரு. சு. முத்துலிங்கம். நிர்வாகக் குழு உறுப்பினர்: திருவாளர்கள் ம. குமாரசாமி, சி. துரைசிங்கம்

# விபுலாநந்தன் காட்டிய கல்வி

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பூலோகத்திலுள்ள நாகரீகம் நிறைந்த நாடுகளுக்குள்ளே உலகச் செல்வத்திலே மிகவும் குறைந்தது நம்நாடு. அனேகர் தம் மக்கள் கல்வி பயிலும் பொருட்டு நிலங்களையும் வீட்டையும் விற்று நகரங்களிற் குடிபுகுந்து வருகின்றனர். இவர்கள் எல்லோரும் தம்மக்கள் தக்க சம்பளம் பெற்றுத் தம்மைக் காப்பாற்றுவர் என நம்புகின்றனர். ஆனல் அவ்வாறு தம் மக்கள் செய்ய இயலாது, தவிக்கும்போது அவர்களுடைய மனம் புண்ணுகாதோ?

#### நம் வேலை

ஆயின் இத்தகைய நிலைமையிலிருந்து தப்ப வழியில்லையோ? இருக்கின்றது. சிறிது காலமேனும் நம் சிறுவர்கள் அனைவரும் வெறும் பட்டங்களைப் பெறுவதற்குப் படிப்பதையும் பன்னிரண்டு ரூபாய் பரீட்சையில் தேறுவதையும் நிறுத்தித் தமக்குப் பிழைப்புக் கொடுக்கக்கூடியதான கைத்தொழில்களைக் கற்றல் வேண்டும். நாற்காலியின் மேலுட்கார்ந்து நாலெழுத்தெழுதி வருவதைவிட நான்கிடத்தில் சரீரக் கஷ்டம் பட்டு சம்பாதிப்பது மேல், என நினைக்கவேண்டும். நமக்கு வேண்டிய பொருள்களுக்குப் பிறநாட்டார் உதவியை நாடி அவர்கள் அனுப்புவதை நம்பி இருத்தலும் கூடாது. பிறர் உதவியை நாடி எழுந்து உட்காருபவன் நொண்டி. அதுபோலத்தான் பிறநாட்டாருடைய பொருள்களை நாம் வாங்குவதும். நம் நாட்டுத் தனிகர்கள் முன்வந்து கைத்தொழிற்சாலை ஏற்படுத்த உதவி செய்தல் வேண்டும். வட்டிக்குப்பணம் கொடுப்[illegible] லாபம் கிடைப்பதோடு, நாட்டின் கைத்தொழிலபிவிருத்தியும் உண்டாகும். நாள் தோறும் வேலைக் கலைந்து திரியும் நம் சிறுவர்களுக்கு வேலையும் கிடைக்கும்.

#### தொழிலும அறிவும் இழையப் போதித்தல்

நம்நாட்டுக்கைத்தொழிலையும் கல்வி நிலைமையையும் ஆராயுமிடத்து எம்மாதிரிக் கல்வி இக்காலம் அவசியமென்று குறிக்கத் தோன்றுகிறது. சிறுவயதிலே எழுதவும் படிக்கவும் தெரிய வேண்டும். அதனுடன் நல்லொழுக்கமும் தெய்வ பக்தியும் ஊன்ற வேண்டும். இதற்குக் குருகுலக் கல்விச் சாலையே அவசியமாகும். சிறுவயதிலே இம்மாதிரிக் கல்வி கற்ற பிறகு, தன் குலத் தொழிலோ அல்லது சிறுவனுக்கு எத்தொழில் கற்க வேண்டுமென்று ஆர்வமுண்டாகிறதோ அதனைப் போதிக்க வேண்டும். அப்படிச் செய்தால் மணப்பருவம் கழிந்ததும் நம் சிறுவர்கள் குமாஸ்தா வேலையைத்தவிர வேறொன்றுமில்லையே எனவும், பெற்றோர் "எத்தனை பணம் செலவழித்தோம். ஏழையானேம். எண் சாண் உடம்பை வளர்க்க வழியில்லாது நாமும் நம் மக்களும் தவிக்கின்றோம்" எனவுங் கூறார். முற்காலத்தில் நடைபெற்று வந்த கல்வி முறையில் நாம் மேற்கூறியபடி அறிவுப் பயிற்சியும் தொழிற் பயிற்சியும் ஒருங்கே அமைந்திருந்தன. நான்கு வருணத்தாரும், தம் ஆசாரியார்களுடன் சிறுவயதிற் கல்விகற்றதுடன், தம் தம் வருணத்தாருக்குரிய தொழில்களையும் கற்று வந்தனர். அதனல் ஒவ்வொருவருக்கும் பிற்காலத்தில் ஜீவனோபாயம் எதுவென்று நன்கு தெரிந்திருந்ததோடு அதிற் பயிற்சியுமிருந்தது. அம்முறையையே நாம் பின்பற்ற வேண்டும். அப்போது ஜாதிச் சண்டைகள் ஒழியும். அமைதியுண்டாகும். ஆகாரமும் ஆடையும் கிடைக்கும்.

### தமிழ் வளர்த்த...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கு மன்னதை
யிடக்குமால்
வேலைநேர் கலைமுழக்குமவ்
வியப்பை
யெங்ஙன மிசைப் பாம்"

அதாவது கல்வியில் சிறப்புற்று விளங்கிய பகுதாத் நகரிலுள்ள கரும்புத் தொழிற்சாலைகளில் உண்டாகும் ஒலியினையும், பூஞ்சோலைகளில் தேனுண்டு பாடும் வண்டுகளின் சத்தத்தையும், வீதிகளில் பெண்கள் குரவையிடும் பேரோசையினையும் அங்கு வேதம் ஓதும் மக்களின் குரல் முழக்கம் அடக்கி விடுகிறதென்று பகுதாத் நகர் காட்சியை வண்ண ஒவியமாகப் பாவடிவில் வார்க்கிறார் புலவர்.

நமது அசனர் லெவ்வைப் புலவருக்கும், மதுரைத் தமிழ் சங்கத்தை நிறுவியவரும் ஒரு காலத்தில் அச் சங்கத் தலைவராயிருந்தவருமான குலாம் காதிறு நாவலருக்குமிடையில் நீண்ட காலமாகத் தொடர்பிருந்து வந்திருக்கிறது. குலாம் காதிறு நாவலரின் ஆரிபு நாயகம், நாகூர் புராணம், பிக்குஹுமாலை, திரிமக் காதிரிபந்தாதி, ஆகிய நூல்களுக்கு அசனர் லெவ்வைப் புலவர் சாற்றுகவி வழங்கியிருக்கிறார்.

அசனர் லெவ்வைப் புலவர் தமிழில் மட்டுமன்றி அரபு மொழியிலும் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார். ஏராளமான அரபு பாடல்களையும் இயற்றியுள்ளார். இவர் 1918-ம் ஆண்டில் மறைந்தார்.

—(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடிவேல் விழாவை முன்னிட்டு

சிலோன் தியேட்டர்ஸ் ஸ்தாபனத்தாரின் மகத்தான வெளியீடு!

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

எல்பின்ஸ்டன் (மருதானை) ரெக்ஸி (வெள்ளவத்தை) வின்சர் (யாழ்ப்பாணம்)
வேல்ஸ் (கண்டி) இம்பீரியல் (மட்டக்களப்பு) அசோகமாலா (நீர்கொழும்பு)
றீகல் (அம்பாறை) அசோகா (புத்தளம்) நெல்ஸன் (திருகோணமலை)

ஆகிய திரைகளில்

மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரன் எஸ். எல். சி. ராஜசுலோசனா, ஈ. வி. சரோஜா,
நடிகவேள் எம். ஆர். ராதா, எம். என். நம்பியார்

முதலியோர் நடித்த

## நல்லவன் வாழ்வான்

வசனம்: அறிஞர் சி. என். அண்ணாத்துரை
இசையமைப்பு: டி. ஆர். பாப்பா
பாடல்கள்: மருதகாசி

பின்னணி பாடியவர்கள்:
சீர்காழி கோவிந்தராஜன்—ஏ. எல். ராகவன்—பி. சுசீலா—லீலா—ஜானகி




## சென்ட்ரல்

[மருதானை]

தினசரி 2. 6, 9-30க்கு
ஞாயிறு காலை 10 மணிக்கு
மற்றும்

### 4 திரைகளில்

நடிகவேள்
**எம். ஆர். ராதா**
பண்டரிபாய்—ஜெமினி—ராஜசுலோசனா... 



### விரைவில் வருகிறது!

சிலோன் எண்டபிரைஸின்
மன்னர்ஸ் திரைகளுக்கு
★ சிவாஜி கணேசன்
★ ஜமுனா-நம்பியார்
★ ரங்காராவ்-கண்ணாம்பா
★ துரைராஜ்-நாகையா
மற்றும் பலர் நடித்த

### நிச்சய தாம்பூலம்

கதை • வசனம்
விருதை ராமசாமி
பாடல்கள்
கவிஞர் கண்ணதாசன்
இசை:
விஸ்வநாதன் - ராமமூர்த்தி

## பெற்றவள் கண்ட பெருவாழ்வு

டைரக்ஷன்: சுப்ரமணியம்


## 3-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு) மொடர்ன் (பதுளை) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை)




* எஸ். எஸ். ராஜேந்திரன்
* ஆர். விஜயகுமாரி
* எம். ஆர். ராதா
* சௌகார் ஜானகி

மற்றும் பலர் நடித்த



ஜூலை 18ந் திகதி புதன் முதல்

கெப்பிட்டல் [கொழும்பு]
சபையர் [வெள்ளவத்தை]
வெம்பிளி [கண்டி]
விஜயா [மட்டக்களப்பு]
மற்றும் 2 திரைகளில்

திடுக்கிடும் சம்பவங்களும், மயிர் கூச் செறியும் மந்திர தந்திரக் காட்சிகளும் நிறைந்த திரைச் சித்திரம்.

என். டி. ராமராவ், அஞ்சலிதேவி, எஸ். வி. ரங்காராவ், சந்தியா மற்றும் பலர் நடித்த

### பட்டி விக்கிரமாதித்தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194ஏ, இலக்கத்தில் 1962-ம் வருடம் ஜூலை மாதம் 15-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.